Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

TUESDAY, OCTOBER 18, 2022

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 18, 2022 | ஒளி: 08 கதிர்: 123 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# “நாங்கள் கண்ணீர்விட்டு கதறுவது ஐ.நாவுக்கே கேட்கவில்லையோ”





**எஸ்.றொசேரியன் லெம்பேட்**

வடக்கு, கிழக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று (17) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் காரியாலயத்தின் முன்பாகவே இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த பெருந்திரளான தாய்மார்கள், கதறியழுத வண்ணம் பல்வேறு கோஷங்களை எழுப்பி தமது கோரிக்கையை முன்வைத்தனர். சர்வதேச நீதியை வலியுறுத்திய தாய்மார்கள்,

தொடர்ச்சி P2

# 40 பேர் பாதிப்பு

**க. அகரன்**



வவுனியா போகஸ்வெவ மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் உட்பட ஆசிரியர்கள் மீது குளவி கொட்டியதில், பாதிக்கப்பட்ட 40 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை பிரார்த்தனையில் நேற்று (17) காலை ஈட்பட்டிருந்தபோது பாடசாலை கட்டடத்தில், கூடுகட்டியிருந்த குளவிகள் கலைந்து கொட்டியுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் உட்பட ஆசிரியர்களில் 12 பேர் பதவிய, மூவர் மாமடு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். 20க்கும் மேற்பட்டோர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பாடசாலையில் காணப்பட்ட குளவி கூட்டை அகற்றுவதற்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்காமையே இவ்வனர்த்ததுக்கு காரணமென பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

# பஸ் கட்டணம் குறையாது



டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணம் குறைக்கப்பட மாட்டாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலான் மிராண்டா, நேற்று (17) தெரிவித்தார்.

பஸ் கட்டணத்தை குறைக்க வேண்டும் எனின், ஒரு லீற்றர் டீசலின் விலையை 4 சதவீதம் அல்லது அதற்கு மேல் குறைக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார். 430 ரூபாயாக இருந்த டீசலின் 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதால், அது 4 சதவீதத்தை விட குறைவான விலைக்குறைப்பு என்றும் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

## வடக்கு இலங்கையில்

# சீன இராணுவ பிரசன்னம்

இலங்கையில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவ பிரசன்னம் அதிகரித்துள்ளமை குறித்து, தமிழகம் தீவிர பாதுகாப்பு கவலைகளை வெளிப்படுத்தி உள்ளதாக, இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் சீனர்களின் செயற்பாடுகள், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் இருப்பதாகவும், கடற்கரையோரங்களில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரச புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. வடக்கு இலங்கையில், சீனாவின் மக்கள் விடுதலை இராணுவ பணியாளர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் வடக்கு கடலில் அட்டை விவசாயத்தை ஆரம்பிப்பதற்கு அதிநவீன கருவிகளை சீனா பயன்படுத்துவதாகவும் புலனாய்வு அமைப்பு, ஆதாரங்களை மேற்கோள் காட்டி எச்சரித்துள்ளது. இலங்கையை தளமாகக் கொண்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களின் உதவியுடன், சில சீன பிரஜைகள் கடல்வழியாக இந்தியாவுக்குள் இரகசியமாக நுழைந்ததாக, புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை விடுத்த சில ந ள்களுக்குப் பின்னர், பாதுகாப்பு ஆலோசனை விடுக்கபட்டுள்ளது.

இலங்கையில் சீன பிரஜைகளின் பிரசன்னம் அதிகரித்து வருகின்மை என்பது, மறுக்க முடியாத உண்மை என்று மேலதிக பொலிஸ் பணிப்பாளரும் தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழுவின் தலைவருமான சந்தீப் மிட்டல் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான சீனத் தூதுவர், சர்வதேச கடல் எல்லைக்கு அருகில் உள்ள தீவுகளுக்கு அடிக்கடி வருகை தருவதும், கடலட்டை அறுவடைக்கான வாய்ப்புகளை மதிப்பிடும் போர்வையில் அப்பகுதியில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானம் மூலமான ஆய்வும் சந்தேகத்துக்குரியதாக இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிறிஸ்மஸ் ஆடம்பரம் வேண்டாம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தல்



இந்த வருட கிறிஸ்மஸ் பண்டிகைக் கொண்டாட்டத்தை குறைத்துக் கொள்ளுமாறு தெரிவித்த கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், அலங்காரங்களுக்காக ஆடம்பரமாகச் செலவு செய்வதைத் தவிர்க்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

நீர்கொழும்பு,

தொடர்ச்சி P2

## புனர்வாழ்வு பணியக

# சட்டமூல வரைவை வாபஸ் பெறவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்





இராணுவத்தால் நடத்தப்படும் புனர்வாழ்வு மையங்களில் மக்களைத் தடுத்து வைப்பதற்காக, அதிகாரிகளுக்கு பரந்தளவிலான அதிகாரங்களை வழங்கும், புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தை இலங்கை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் என்றும் தடுத்து வைக்கப்படுவோர், துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக நேரிடும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், நேற்று (17) தெரிவித்தது.

செப்டம்பர் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியக

தொடர்ச்சி P2

## 2023க்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம்

# முதலாவது மதிப்பீட்டுக்காக இன்று சமர்ப்பிப்பு



**21ஆம் திகதி வரை சபை கூடும்.**
**பெற்றோலிய விவாதம் இன்று!**
**6 சட்டமூலங்கள் மீது ஒக். 19 விவாதம்.**
**20, 21ஆம் திகதிகளில் 22 மீதான விவாதம்.**

2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவுசெலவுத்திட்டம்) பாராளுமன்றத்தில் (முதலாவது மதிப்பீட்டுக்காக) இன்று (18) சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வாரத்துக்கான பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் குறித்து தீர்மானிப்பதற்காக அண்மையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பாராளுமன்றம் இன்று (18) முதல் 21ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், ஒவ்வொரு நாளும் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கூட்டமைப்பினர் குழப்ப முயற்சி



**பா.நிரோஸ்**

காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டுமென ஊடகங்கள் முன்பாகக் கூறும் கூட்டமைப்பினர், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும்போது, அதனை மூழ்கடிக்கப் பார்ப்பதாகக் குற்றஞ்சுமத்தும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ, கூட்டமைப்பு எம்.பி கோவிந்தன் கருணாகரனுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

நீதி அமைச்சில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், யுத்தக் காலத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பில், நீதி அமைச்சின் கீழ் இயங்கும் காணாமல்போனருக்கான அலுவலகத்தின் கீழ் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


தொடர்ச்சி P2

## 13ஆவது திருத்தம் குறித்து

# புதிய ஒப்பந்தம் வேண்டும்

## இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு

## இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்றால் இலங்கைக்கும் அச்சுறுத்தல்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ், தமிழர் பிரச்சினையில் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்ற போதுமான விடயங்களை செய்யவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா தெரிவித்திருந்த நிலையில், 13 குறித்து புதிய ஒப்பந்தம் வேண்டும் என்று இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

... இலங்கை ஒரு மாற்றக்

தொடர்ச்சி P2

# சீனத் தூதுவருடன் ‘மொட்டு’ பேச்சு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோர், இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹொங்குடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பேச்சுவார்த்தை நடத்தியதாக கட்சியின் எம்.பியான ரஞ்சித் பண்டார, தனது டுவிட்டர் பதிவில் நேற்று (17) குறிப்பிட்டுள்ளார். இலங்கை வர்த்தகர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் சீனாவுக்குத் திரும்புவதற்கு விசா வழங்கப்படும் என தூதுவர் வலியுறுத்தியதாகவும் கொவிட் 19 கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் போது, சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்ததாக அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பட்டிணி தீயை அணைக்க யுத்தத் தீக்குள் தள்ளுவதா?




**பா.நிரோஸ்**

தமிழ் அடிப்படைவாதிகள் இந்நாட்டில் முதலீடுகளை மேற்கொண்டால், எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி நாட்டை மோசமான நிலைக்கு தள்ளிவிட வேண்டாமென அரசாங்கத்திடம்

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு முழுமையான

# ஆதரவு வழங்குவதாக ‘பரிஸ் கிளப்’ உறுதி



கடன் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணும் இலங்கையின் முயற்சிகளுக்கு, ‘பரிஸ் கிளப்’ தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த உச்சி மாநாட்டில், பரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸை சந்தித்ததாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான், தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

‘இலங்கையின் கடன் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணும் முயற்சிகளுக்கு ‘பரிஸ் கிளப்’பின் முழு ஆதரவை தருவதாக ரூஸ் உறுதியளித்தார்’ என்று அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

கடனாளி நாடுகள் அனுபவ

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நாங்கள் கண்ணீர்விட்டு கதறுவது ஐ.நாவுக்கே கேட்கவில்லையோ

காணாமலாக்கப்பட்டவர்களின் தலைவிதியை வெளிப்படுத்த வேண்டுமென வலியுறுத்தினர். அரசாங்க இழப்பீட்டு தொகையான 2 இலட்சம் ரூபாய் தங்களுக்கு வேண்டாமென நிராகரித்தும் கோஷமெழுப்பினர்.

# சட்டமூல வரைவை வாபஸ் பெறவேண்டும்

சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் புனர்வாழ்வு பணியகங்களில் இராணுவத்தினரை பணியாளர்களாக கொண்ட பாதுகாப்பு அமைச்சினால் கட்டுப்படுத்தப்படும் புதிய நிர்வாகக் கட்டமைப்பை நிறுவும் என்றும் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த புனர்வாழ்வு மையங்களில் போதைக்கு அடிமையானவர்கள், முன்னாள் போராளிகள், வன்முறை, தீவிரவாத குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் வேறு ஏதேனும் குழுவை சேர்ந்தவர்கள் வலுக் கட்டாயமாக காவலில் வைக்க அனுமதிக்கும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள இந்த சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள கண்காணிப்பகம், புனர்வாழ்வுக்காக அனுப்பப்படுவதற்கான காரணத்தை குறிப்பிடவில்லை என்றும், எந்தவொரு குற்றத்திலும் தண்டனை பெறாதவர்களை வலுக்கட்டாயமாக புனர்வாழ்வு செய்வதற்கான தன்னிச்சையான அதிகாரங்களை வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளது. உத்தேச புனர்வாழ்வு பணியக சட்ட மூலமானது, குற்றஞ்சாட்டப்படாத ஒருவரை தடுப்புக்காவலில் வைப்பதன் புதிய வடிவம் என்றும் சித்திரவதை, தவறான சிகிச்சை மற்றும் முடிவில்லாத காவலில் வைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டினார்.

**“ தன்னிச்சையான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளை அங்கீகரிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு நெருக்கமானது எனவும் சிறுபான்மை சமூகங்கள் அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடிப்படைவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை குறிவைக்க இந்த சட்டம் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்**

புனர்வாழ்வு சட்டமூலம் என்பது, இலங்கையில் தன்னிச்சையான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளை அங்கீகரிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு நெருக்கமானது எனவும் சிறுபான்மை சமூகங்கள் அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடிப்படைவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை குறிவைக்க இந்த சட்டம் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய ஒப்பந்தம் வேண்டும்

கட்டத்தில் உள்ளது என்றும் நாட்டில் சமூக மற்றும் அரசியல் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்றும் குறிப்பிட்ட அவர், 13ஆவது திருத்த பிரச்சினையும் அதே வகையின் கீழ் வருவதால், நாங்கள் ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில், அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் கீழ் தமிழர் பிரச்சினையில் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்ற போதுமான விடயங்களை செய்யவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வெளியிட்ட கருத்துக்கும் அவர் பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கான எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும், இலங்கைக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்திய இலங்கை ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வுக்கு அமைய தனது துறைமுகங்களை இந்தியாவின் நலன்களுக்கு பாதகமான எந்த வகையிலும் பயன்படுத்த இலங்கை அனுமதிக்காது என்று உயர் ஸ்தானிகர், இந்திய அரசாங்கத்துக்கு உறுதியளித்துள்ளார்.

இலங்கை முகங்கொடுக்கும் கடன் நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக, இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பை இலங்கை விரும்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பு நடந்தவுடன் புவிசார் அரசியல் பிரச்சினைகள் தானாகவே தீர்க்கப்படும் என்று தான் நம்புவதாகத் தெரிவித்த அவர், அதுவரை நாம் உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நல்ல பொருளாதார ஈடுபாட்டிற்கான சான்றிதழ் முக்கியமானது என்றும் இது முதலீட்டையும் ஏற்றுமதியையும் ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்ட அவர், இந்திய-சீனப் போட்டி பேச்சுவார்த்தையை பாதித்துள்ளது என்று தான் நினைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

நமது பிராந்தியத்தில் அரசியல் ஆபத்தான கட்டத்தில் நுழைந்துள்ளது என்பது உண்மைதான் எனவும் நாம் என்ன செய்கிறோம் என்பதன் ஒவ்வோர் அம்சத்திலும் புவிசார் அரசியல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார்.

**“ நாம் என்ன செய்கிறோம் என்பதன் ஒவ்வோர் அம்சத்திலும் புவிசார் அரசியல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார்**

# முதலாவது மதிப்பீட்டுக்காக இன்று சமர்ப்பிப்பு

இதற்கமைய பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இன்று (18) நடத்தப்படவுள்ளது. அத்துடன் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

ஒக்டோபர் 19ஆம் திகதி மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை நீதி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட 06 சட்டமூலங்களை விவாதத்துக்கு எடுக்கவும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்தது. இதற்கமைய நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம், நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம், அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம், விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டமூலம், மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் என்பன இரண்டாவது மதிப்பீட்டுக்காக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரையான நேரம் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது. அன்றையதினம் பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப 5.30 மணி வரை நடைபெறும் அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் முடிவுக்கு வந்ததும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

# சீனத் தூதுவருடன் மொட்டு பேச்சு

இலங்கையர்கள் தற்போது கஷ்டத்தில் வாழ்கின்ற போதிலும், நாடு மீளும் என அரசாங்கம் நம்பிக்கையுடன் இருப்பதாக குறிப்பிட்ட சீன தூதுவர், சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தவும் ஒப்புக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி மற்றும் காமினி லொகுகே ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# ஆதரவு வழங்குவதாக பரிஸ் கிளப் உறுதி

கடனாளி நாடுகள் அனுபவிக்கும் கொடுப்பனவு சிரமங்களுக்கு ஒருங்கிணைந்த மற்றும் நிலையான தீர்வுகளை கண்டறிவதில் முக்கிய பங்கு வகிக்கும், பெரிய கடன் வழங்கும் நாடுகளின் அதிகாரிகள் குழுவே பரிஸ் கிளப் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. பரிஸ் கிளப்பில் 22 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளதுடன், இதில் பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜப்பான் ஆகியவை அடங்குகின்றன.

# பட்டினி தீயை அணைக்க யுத்தத் தீக்குள் தள்ளுவதா?

கோரிக்கை விடுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, பட்டினி என்கிற தீயை அணைப்பதற்குப் பதிலாக நாட்டை மீண்டும் யுத்தத் தீக்குள் தள்ளுவது நாட்டுக்குப் இழைக்கும் பாரிய குற்றம் எனவும் தெரிவித்தார்.

தமிழ் அடிப்படைவாதிகளுடன் அரசாங்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்கே எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதியின் காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், பிரிவினைவாதிகளின் நோக்கத்தை நிறைவேற்றவே சர்வதேச காலநிலை ஆலோசகரர் என்கிற போலியான முகமூடியை அணிந்துகொண்டு எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கைக்கு வந்துள்ளார். எரிக் சொல்ஹெய்ம்க்கு காலநிலை தொடர்பில் எதுவும் தெரியாது எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பாக இருந்தபோது ஹெரிக் சொல்ஹெய்ம் 5 இலட்ச அமெரிக்க டொலர்களை தனது 22 மாதப் பயணச் செலவுகளுக்காக செலவிட்டதால் ஏற்பட்ட விமர்சனங்களுக்கு மத்தியில் அவர் பதவியிலிருந்து விலகும் நிலைஏற்பட்டது என்றார்.

காலநிலை தொடர்பில் மோசமான வரலாற்றைக் கொண்ட எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் ஆலோசகரானது எப்படி? தனக்கு நன்கு அறிமுகமான தமிழ் பிரிவினைவாதிகளுடன் அரசாங்கத்துக்கு தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுக்கவே ஜனாதிபதியின் ஆலோசகராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டுள்ளார். இனியும் தங்களால் நிவாரணங்களை வழங்க முடியாதென இந்தியா அறிவித்துள்ளது. சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கையெழுத்திடுவதை இலங்கை தொடர்ந்து காலத்தாழ்த்தி வந்ததால், அந்த ஒப்பந்தம் கையெழுத்திடும் வரையில் எந்தவிதமான உதவிகளையும் வழங்கப்போவதில்லை என சீனாவும் அறிவித்திருக்கிறது என்றார்.

யுத்தம் காரணமாக ரஷ்யாவும், பொருளாதாரப் பிரச்சினைகளால் ஐரோப்பாவும் இலங்கைக்கு உதவாத நிலையில், தமிழ் பிரிவினைவாதிகளையே அரசாங்கம் நம்பியிருக்கிறது. கப்பம் பெறுவதே புலிகளின் பிரதான வருமானம்பெறும் வழியாக இருந்ததாக அனைவரும் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில், மனித வியாபாரங்கள், போதைப்பொருள், ஆயுத, தொல்பொருள்கள், கறுப்புப் பணங்களை வெள்ளையாக மாற்றுவது, கடற்படை சேவைகள், உணவகங்கள், தொலைக்காட்சி, வானொலிகளை ஆகியவற்றை நடத்திச் செல்வதன் ஊடாகவே புலிகளுக்கு வருமானம் கிடைத்ததாகவும் தெரிவித்தார்.

இந்த வருமானங்களை யுத்தம் புரிவதற்கும் தமிழீழ நிர்வகிப்புகளுக்கும் புலிகள் செலவிட்டனர். எனினும், யுத்தம் நிறைவடைந்தப் பின்னர் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரும் மேற்குறித்த வழிகளில் வருமானங்கள் கிடைத்தாலும் அவர்களுக்கு செலவுகள் இல்லை. இதனால், பில்லியன் கணக்கான டொலர்கள் புலிகளிடம் இருக்கின்றன. எனவே, தமிழ் அடிப்படைவாதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களை மகிழ்வித்து இவர்களிடமிருந்து கடனையும், முதலீட்டையும் பெறும் வேலைகளை செய்வதற்காகவே சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டுள்ளார் என்றார்.

# கிறிஸ்மஸ் ஆடம்பரம் வேண்டாம்

படபத்தல புனித தெரேசா தேவாலயத்தின் 75ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று (17) நடைபெற்ற ஆராதனையின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார். நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் போது தேவாலயங்கள் மற்றும் ஏனைய இடங்களை அலங்கரிப்பதற்காக பணத்தை வீணாக்கக்கூடாது என்று குறிப்பிட்டார். பசியில் ஏராளமானோர் வாடுவதால், ஏழைகளுக்கு உணவு வழங்கும் செயலை மாத்திரமே இந்த கிறிஸ்மஸ் காலப்பகுதியில் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேலும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது என்றும் தற்போதைய ஜனாதிபதி, பின் வாசலில் வழியாக வந்தவர் என்பதால், அந்தப் பதவியை வகிக்க மக்களுக்கு சம்மதம் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு, தாக்குதலின் பின்னணியில் அரசியல் பின்னணி இருக்கலாம் என்று தெரிவித்துள்ளதாக பேராயர் கூறினார். ஸ்காட்லாந்து யார்டை அழைத்து விசாரணை நடத்துவதாக தற்போதைய ஜனாதிபதி உறுதியளித்j போதும்,இதுவரை எதுவும் செய்யப்படவில்லை என்றார். தான் அரசியல் பேசுவதாக தன்னை விமர்சிப்பதாக குறிப்பிட்ட அவர், சமூக அநீதிகள் இருக்கும் இடத்தில் திருச்சபை அமைதியாக இருக்க முடியாது என்று பாப்பரசர் பிரான்சிஸ் அண்மையில் தெரிவித்த கருத்துக்கும், சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் கூற்றுக்கும் இணங்க தான் செயற்படுவதாக குறிப்பிட்டார்.

# கூட்டமைப்பினர் குழப்ப முயற்சி

இந்த விசாரணைகள் நடைபெறும் வேகம் தொடர்பில் சர்வதேசம், உள்நாட்டிலும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன என்றார்.

நான் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் 62 நபர்கள் தொடர்பிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், நான் அமைச்சுப் பதவியை ஏற்று குறுகிய மூன்று மாதக் காலப் பகுதியில் 1,429 நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம் என்றார்.

அம்பாறை மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் காணாமலாக்க ப்பட்டோருக்கான அலுவலகம் விசாரணைகளை முன்னெடுத்தபோது, இம்மாதம் 15ஆம் திகதி அந்த இடத்துக்கு வந்த கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் உள்ளிட்டக் குழுவினர் அங்கு வந்து விசாரணைகளை நிறுத்தியதோடு, அங்கிருந்த அதிகாரிகளையும் அச்சுறுத்தியுள்ளனர் என்றார்.

விசாரணைகளுக்கு வந்திருந்த 67 குடும்பங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களும் கோவிந்தன் கருணாகரனின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் திரும்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிக்கிடைக்க வேண்டுமென கூட்டமைப்பினர் ஊடகங்களுக்கு தொடர்ந்து கூறுகிறார்கள். ஆனால், இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது அதனை கோவிந்தன் கருணாகரன் போன்றவர்கள் குழப்புகிறார்கள் என்றார்.

எவ்வாறாயினும் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடன் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவித்தார்.

குறைப்பதால் பயனில்லை

# கட்டணங்களில் மாற்றமில்லை

பெற்றோலின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் முச்சக்கரவண்டி கட்டணத்தில் திருத்தம் செய்ய முடியாது என்று அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக், நேற்று (17) தெரிவித்தார்.

கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனின், முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கும் எரிபொருளின் அளவை அதிகரிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது, வாராந்தம் வழங்கும் 5 லீற்றர் பெற்றோலை நாளாந்தம் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார்.

எரிபொருளின் விலையை அரசாங்கம் குறைத்தாலும் கறுப்பு சந்தையில் அதிக விலைக்கு பெற்றோலை கொள்வனவு செய்ய நேரிடும் என்பதால், விலையை குறைப்பதால் தமக்கு எந்த நன்மையும் இல்லை என்றார்.

தமக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு அதிகரிக்கப்பட்டால், முச்சக்கரவண்டிக்கான கட்டணம் நிச்சயமாக குறைக்கப்படும் என்றும் தற்போது முதல் கிலோமீற்றருக்கு 120 ரூபாயும், அதன்பின் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 100 ரூபாயும் வசூலிக்கப்படுவதாக தெரிவித்தார்.

# குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டும்

## ரணிலிடம் கேட்கிறார் இராஜாங்க அமைச்சர்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி இருந்தாலும், அவர் மீது நாம் கடந்த காலங்களில் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தற்போதும் அப்படியே இருப்பதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பேர வாவியில் குளித்தது நினைவிருக்கிறதா என பொதுஜன பெரமுனவிடம் கேட்கிறார்கள். ஆம் நினைவிருக்கிறது. ஆனால் நாங்கள் வீழ்ந்த இடத்திலிருந்தே மீண்டெழுந்திருக்கிறோம் என்றார்.

ஜனாதிபதி ரணில் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில், அவர் பதிலளிக்க வேண்டும். எனினும் நாட்டுக்கு ஜனாதிபதி ஒருவர் தேவை என்பதாலேயே நாம் ரணிலை ஜனாதிபதி ஆக்கினோம் எனவும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த 20 வருடங்களாக பாராளுமன்றத்தில் இருந்துகொண்டு குற்றச்சாட்டுக்களை மாத்திரமே சுமத்திக்கொண்டிருக்கிறார். இதனைத் தவிர வேறு எதனையும் அவர் செய்ததில்லை என்றார்.

# பார்க்காது பார்த்து வரியை அறவிடவும்

குறைந்த வருமானத்தைப் பெறுபவர்களுக்கும், அதிகளவான வருமானத்தைப் பெறுபவர்களுக்கும் இடையில் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கே புதிய வரி அறவீடுகளை அரசாங்கம் அமல்படுத்தியுள்ளதாக முன்னிலை சோசலிச கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அரசாங்கம் உண்மைகளை மூடிமறைத்து, பொய்களைப் பரப்பி வருகிறது. ஓர் இலட்ச ரூபாய் சம்பளத்தைப் பெறுபவர்களிடம் வரியை அறிவிடுவதால் பிரச்சினை இல்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார். 2019ஆம் ஆண்டு காணப்பட்ட ஓர் இலட்ச ரூபாயின் பெறுமதி, தற்போது வெறும் 30 ஆயிரம் ரூபாயாக குறைவடைந்துள்ளது.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் அதிகளவான வருமானத்தைப் பெறுபவர்களுக்கும் இடையில் பிரச்சினையை ஏற்படுத்தவே அரசாங்கம் இவற்றை செய்கிறது எனவும் தெரிவித்தார்.

சர்வாதிகாரிகளைப் போல செயற்படும் நிறுவனங்கள் இருக்கின்றன. கொரோனா வைரஸ் காலத்தில், இந்நிறுவனங்கள் அதிகளவான வருமானத்தை ஈட்டியுள்ளன.

வர்த்தகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா, வரி செலுத்துவதில்லை என விமர்சிக்கப்பட்டுவந்த நிலையில், எம்.பியான பின்னரே அவர் வரி செலுத்தியுள்ளார்.

வருமானத்தைப் பார்த்து வரியை அதிகரிக்க வேண்டும். எனினும் சம்பளத்தைப் பார்த்தே வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. பாரிய நிறுவனங்கள் பெறும் வருமானத்திலிருந்து வரியை அதிகரிக்காது, அந்நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களிடமிருந்தே வரி அறிவிடப்படுவதாக தெரிவித்த அவர், ஆகையால், சம்பளத்தை பார்க்காது, வருமானத்தை பார்த்து வரியை அறவிடுமாறும் கோரினார்.



# பெரும்பான்மை எம்மிடம் உள்ளது



பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலமாக இருப்பதாக தெரிவிக்கும் பிரதமர் தினேஸ் குணவர்தன, அரசியல்பேதங்களுக்கு அப்பால் நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கு மத்தியில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அரசியல் வேறுபாடுகளை ஏற்படுத்திக்கொள்வதைவிட, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஒன்றிணைந்து கைகோர்த்து செல்ல வேண்டும்.

நாட்டின் உற்பத்திகளைப் பயன்படுத்திக்கொண்டு அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் தேவை. அதுபோல அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க நாம் புதிய வழிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எமது அரசாங்கம் பலமாக இருக்கிறது. பாராளுமன்றத்தில் எமக்கு பலமில்லை என்றால், வாக்கெடுப்பின் ஊடாக எங்களால் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்திருக்க முடியாது எனவும் பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.






## உறவுகள் எங்கே?

கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐ.நா அலுவலகத்துக்கு முன்பாக வடக்கு, கிழக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் நேற்று (17) முன்னெடுக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

# உள்ளூராட்சி தேர்தலை உரிய திகதியில் நடத்தவும்



மஹிந்தானந்த போன்றவர்கள் மீண்டும் நாட்டு மக்கள் முன்பாக வந்து, நகைச்சுவை நடிகராக ஆகிறார்கள் என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சி மன்ற தேர்தலைப் பிற்போடாது உரிய திகதியில் நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆட்சியாளர்களின் இலஞ்ச, ஊழல் மோசடிகள், சர்வதேச ரீதியில் பேசப்படுகிறது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, விவசாய அமைச்சராகப் பதவியேற்றதும், இரசாயன உரம் மீதான தடையை விதித்து, ஓர் இரவில் முழுநாட்டையும் நாசம் செய்துவிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சிறைக்கு அனுப்பும் வரையில், தனக்கு நித்திரை வருவதில்லை என மஹிந்தானந்த கூறினார். சீனாவிலிருந்து கழிவு உரத்தைக் கொண்டுவந்தார். உரத்தைப் பார்ப்பதற்கு முன்னரே கோடிக்கணக்கில் சீன உரக் கம்பனிக்கு நிதியை செலுத்தியிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர், மீண்டும் மக்கள் முன்பாக வந்து ஜோக்கர்கள் ஆகிறார்கள் என்றார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை உரிய திகதியில் ஜனாதிபதி நடத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

# செயலகத்தை நிறுவுவது காலத்தின் தேவையாகும்



காலநிலை மாற்றம் தொடர்பான செயலகத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கதென, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

'கோப் 27 காலநிலை மாநாடு' அடுத்த மாதம் எகிப்தில் நடைபெற உள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் இச்செயலகத்தை நிறுவ தீர்மானித்துள்ளமை சிறந்தது.

இது தொடர்பில் அமைச்சரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது:

காலநிலை மாற்றத்தால் உலகம் பெரும் ஆபத்தை எதிர்கொள்கிறது. இதனால் ஏற்படும் அழிவுகள், சவால்களை எதிர்கொள்ள வல்லரசுகள் முயல்கின்றன. இதை முன்னுதாரணமாகக் கொண்டுதான், இலங்கையிலும் காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் நிறுவப்பட உள்ளது.

சூழலைப் பாதுகாத்து மக்களை சுகதேகிகளாக வாழ வைக்கும் ஜனாதிபதியின் முடிவு, சாலச்சிறந்ததும் காலத்துக்கேற்றதுமாகும்.

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் நிறுவப்படவுள்ளதுடன், இம்மாற்றங்களை கையாள்வதற்கான சட்ட மூலமும் தயாரிக்கப்படவுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜப்பானின் உதவியுடன் காலியில் பயிற்சி நிலையம்



ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் தையல் பயிற்சி நிலையம் காலி மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் பங்களிப்புடன் IOMஇனால் நிறுவப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக இலங்கைக்கு மீளத் திரும்பிய இலங்கையின் வெளிநாட்டு பணியாளர்களை, சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் மீள இணைப்பதற்கு ஆதரவளிக்கும் திட்டம், சமூக பொருளாதார விருத்தி மற்றும் புலம்பெயர்ந்து பணியாற்றி மீளத்திரும்பியோரை சமூகத்தில் சுமூகமாக மீள இணைப்பது போன்றவற்றை இலக்காகக் கொண்டு, இப்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய தூதரகத்தின் தூதுக்குழுவின் பிரதித் தலைவரும், அமைச்சருமான கட்சுகி, வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் இணைந்து இந்நிலையத்தைத் திறந்து வைத்துள்ளனர்.

இந்த நிலையத்தினூடாக இலங்கையிலுள்ள புலம்பெயர் பணியாளர்களுக்கு எதிர்கால வாய்ப்புகளை விரிவாக்கம் செய்துகொள்வதற்கு அவசியமான பிரயோக பணியாற்றல் திறனை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு அவசியமான வசதிகள் வழங்கப்பட உள்ளன.

# சிறுவர்களின் படங்களை காட்டி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி



இந்நாட்டுச் சிறுவர்கள் போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை மறைமுகமாகக் காண்பித்து, அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பெறுவதற்கு சில குழுக்கள் முயல்வதாக 'லக் வனிதா' அமைப்பின் கண்டி மாவட்டத் தலைவி சாந்தினி கொங்கஹகே தெரிவித்தார்.

ஐ.நா அமைப்பின் சில அறிக்கைகளை காட்டி, இந்நாட்டு சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி, நாட்டின் அதிகாரத்தைப் பெற சில குழுக்கள் செயற்படுகின்றன எனத் தெரிவித்தார்.

# அதிகரித்த நீர்மட்டங்கள் குறைவடைந்தன



நாட்டின் பிரதான ஆறுகளின் நீர்மட்டங்கள் குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் எஸ்.பி.சி சுகீஸ்வர தெரிவித்துள்ளார்.

மழை காரணமாக, நாட்டின் பிரதான ஆறுகளின் நீர்மட்டங்கள் அதிகரித்திருந்த நிலையில், தற்போது அவை குறைவடைந்துள்ளன. குறிப்பாக அதிகளவான நீர் நிரம்பியுள்ள பிரதேசங்களில் நேற்று (17) நண்பகல் அளவில் நீர்மட்டம் குறைவடைந்ததாகவும் தெரிவித்தார்.

தாழ்நில பிரதேசங்களில் கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கை சற்றுகுறைவடைந்து இருந்தாலும், எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கைக்கு முகங்கொடுக்க நேரலாம் என்பதால், வெள்ளப்பெருக்கு தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் எச்சரித்தார்.

எவ்வாறாயினும் மேல், சப்ரகமுவ, வடமேல் ஆகிய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் சுமார் 75 மில்லிமீற்றர் மழை பெய்யலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசில் வழங்கியது பாகிஸ்தான்



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயமும் பாகிஸ்தானின் உயர்கல்வி ஆணைக்குழுவும் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் 2022ஆம் வருடத்துக்கான 'அல்லாமா இக்பால்' புலமைப்பரிசில் இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், சனிக்கிழமை (15) நடைபெற்ற நிகழ்விலேயே இவ்வாறு புலமைப்பரிசில் வழங்கப்பட்டன.

2022ஆம் ஆண்டுக்கான தெரிவில் 1,200 மாணவர்கள் தோற்றியிருந்த நிலையில், அவர்களில் 396 பேர் இந்தப் புலமைப்பரிசிலுக்கு தகுதி பெற்றுள்ளனர். உயர்கல்வி ஆணையத்தின் குழுவால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சைகள் மற்றும் விண்ணப்பதாரர்களின் முன்னைய கல்வி மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு முறை இடம்பெற்றதாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

### தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை இன்மை காரணமாகவே

# அரசாங்கம் தமிழர்களை தொடர்ந்து ஏமாற்றுகின்றது

## சிவசக்தி ஆனந்தன்

**க.விஜயரெத்தினம், வ. சக்தி**

இந்தநாட்டில் தமிழ்மக்களை எள்ளிநகையாடி,ஏளனமாக நினைத்து, ஸ்ரீ லங்கா அரசு ஏமாற்றி வருகின்றது. இதற்கான பிரதான காரணம், தமிழ்கட்சிகளிடையே ஒற்றுமை இன்மையாகும். ஈழவிடுத்தலைப் போராட்டம் தோல்வியுற்றதற்கான பிரதான காரணம், தமிழ்க் கட்சிகளுக்கு இடையேயும், இயக்கங்களுக்கு இடையிலும் ஒற்றுமையின்மை ஆகும். தமிழர்களைப் பொறுத்தவரையில், பிரிந்து செல்லாமல் அனைவரும் ஒற்றுமைப்பட்டு, தமிழ் மக்களின் நலனுக்காக, தூரநோக்கு சிந்தனையுடன் செயற்படவேண்டும் என முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் தியாகிகளை கௌரவிக்கும் அஞ்சலி நிகழ்வு, பெரியகல்லாறு மெதடிஸ்த மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) மாலை மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினர் சண்முகநாதன் கணேசநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்,மக்கள் முன்னேற்ற கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து, ஈ.பி.ஆர்.எல். எப் கட்சியின் முக்கியஸ்தர்கள்,



ஆலயங்களின் தலைவர்கள், கலந்துகொண்டு தியாகிகளுக்கு மலர் தூவி, ஈகைக்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தியாகிகளின் குடும்பங்களுக்கு பொன்னாடை போற்றி, தியாகிகளின் உருவப்படங்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இங்கு, வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தொடர்நது கருத்து தெரிவிக்கையில்;

பெரியகல்லாறு மண் பல தளபதிகளையும்,திறமையான போராளிகளையும் உருவாக்கிய சிறந்த மண்ணாகும். ஈழவிடுதலைப் போராட்டத்துக்காக கிழக்கு மாகாணத்திலிருந்து சென்ற முதற்போராளி தோழர் சிவாவை இந்தமண் ஈர்ந்து உவர்ந்தளித்துள்ளது.

தமிழ்மக்கள்மீது கட்டவீழ்த்தப்பட்ட இனசுத்திகரிப்பு, இன அடக்குமுறை, அநியாயங்களை துடைந்தெறிந்து, தமிழ்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும் எனும் தமிழின விடுதலைப் போராட்டத்துக்கு பாரிய பங்களிப்பை இம்மண்ணில் உதிர்த்த தியாகிகள் செய்திருகின்றார்கள்.

இன்று, தமிழ் மக்கள் தொடர்ந்து ஸ்ரீ லங்கா அரசாங்கத்தால் ஏமாற்றப்படுவதற்கான பிரதான காரணம், தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை இன்மையாகும். இலங்கை தமிழர்களின் பிரச்சினைகள், இன்று ஐ.நா வரையும் ஒலித்துக் கொண்டுள்ளது. இலங்கையில் தமிழ் மக்களுக்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றுமைபடவேண்டும்.

.உலகநாடுகளின் உள்ள தமிழ் மக்கள் இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினையை தீர்க்கவேண்டும் என போராடி வருகின்ற இவ்வேளையில், நம்நாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகள், அமைப்புகள் ஏன் ஒற்றுமைப்படாமல் இருக்கின்றன என்பது தமிழ்மக்களின் கேள்வியாக இருக்கின்றது.

எனவே, அனைத்து கட்சிகளும் தமிழ்மக்களின் நலனுக்காக ஒற்றுமைப்பட வேண்டும். இந்த மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுகூடி, தமிழ்மக்களின் நலனுக்காக தீர்மானம் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டுள்ளோம். எனவே அனைத்து கட்சிகளும் பங்குபற்ற வேண்டும் எனத்தெரிவித்தார்.

# வல்லையில் தொடரும் வழிப்பறி கொள்ளை

**எம். றொசாந்த்**

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, ஆள் நடமாட்டம் குறைவான வல்லை வெளிப் பகுதியில், முன்னிரவு வேளைகளில் மோட்டார் சைக்கிள்களில் நடமாடும் வழிப்பறி கொள்ளையர்கள், பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (16) மாலை வேளை, பருத்தித்துறை பகுதிக்கு வல்லை வெளி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிப பெண்ணின் 5 பவுண் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளை பின் தொடர்ந்து, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு வழிப்பறி கொள்ளையர்கள், வல்லை பகுதியில் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த வயோதிப பெண்ணின் தாலிக்கொடியை இழுத்து அறுத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

இதனால் வயோதிப பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி விபத்துக்கு உள்ளானது. அதில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் , யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த பகுதியில், கடந்த ஒரு வார காலப்பகுதிக்குள் ஐந்துக்கும் மேற்பட்ட வழிப்பறி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வெள்ளிக்கிழமை (14) மூன்று பவுண் தாலி , இரண்டு பவுண் சங்கிலி , மோட்டார் சைக்கிள், ஐ. போன் மற்றும் மூன்று கிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பவற்றுடன் வடமராட்சி, அல்வாய் பகுதியை சேர்ந்த 23 வயதான இளைஞன், பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம், சனிக்கிழமை குறித்த நபர், பொலிஸ் நிலைய மலசல கூட ஜன்னல் வழியாக தப்பி சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் நலன்புரி சங்கத்தின் ஆண்டு விழா







**எஸ். தில்லைநாதன்**

யாழ்ப்பாணம், வடமராட்சிக் கிழக்கு பொற்பதி நலன்புரி சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா, நேற்று முன்தினம் (16) சங்கத்தின் தலைவர் அசோக் தலைமையில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தொழில் முயற்சிக்கான உபகரணங்கள், உலர் உணவு பொதிகள், சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு என்பன விழாவில் இடம் பெற்றன.

சமூக செயற்பாட்டாளர் வேந்தன், மருதங்கேணி கோட்ட கல்வி பணிப்பாளர் சிறிராமச்சந்திரன், தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ்ப்பாண பிரதிநிதி உ. நிதர்சன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஸ்குமார், பொற்பதி றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் கதிர்காமநாதன், மக்கள் நலன்புரி சங்க நிர்வாகிகள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அகத்தியர் தாபனத்துக்கு விஜயம்





அகத்தியர் இலங்கையில் வாழ்ந்த கங்கு வேலி பிரதேசத்துக்கு, நேற்று முன்தினம் (16) இலங்கை சித்தர்கள் குரல் அமைப்பினர் விஜயம் செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி , மகேஸ்வரன் சுவாமி, கனடாவைச் சேர்ந்த ஆன்மீக பரோபகாரி குமார், கே. ஜெயசிறில், தமிழகரன் சனா, சனுஸ்காந்த், பிரசானந்த் ஆகியோர் பயணத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

இவர்களுடன் அகத்தியர் தாபன தலைவர் வே. தவராசா , சேனையூர் பாடசாலை அதிபர் கே. கணேசலிங்கம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டார்கள். அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீரத்தில் சித்தர் குரல் அமைப்பினர் முறைப்படி எண்ணெய் வைத்து, நீராடி, மரகதலிங்கத்துக்கு அபிஷேகம் செய்தனர்.


'விபுலமாமணி' வி.ரி சகாதேவராஜா



### ஆறுகால்மடத்தில் ஓட்டோ

# உதிரிப்பாக கடைமீது தாக்குதல்

**நிதர்சன் வினோத்**



யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஆறுகால்மடம் லோட்டஸ் வீதியில் அமைந்துள்ள ஓட்டோ உதிரிப்பாக கடையின் மீது நேற்றுமுன்தினம் (16) இரவு நபரொருவர், கடையின் கதவைக் கொத்தி, உட்சென்று வாகன உதிரிப்பாகங்களை அடித்து நொருக்கி, தியிட்டுவிட்டு தப்பி சென்றுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# புழல் சிறையில் நீர்கொழும்பு மீனவர்கள்

**மன்னார் நிருபர்**



எல்லை தாண்டி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை இந்திய கடற்படையினர் ஞாயிற்றுக்கிழமை (16) கைது செய்த நிலையில், மீனவர்களை திங்கட்கிழமை (17) இராமநாதபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் படுத்திய போது, இம்மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த மார்க்ஸ் ஜூட் மாஸ்டர், ஆண்டனி ஹேமா நிஷாந்தன், இம்மானுவேல் நிக்சன், துருவந்தா ஸ்ரீலால், சுதீஷ் சியான் ஆகியோரே இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்த படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஐந்து இலங்கை மீனவர்களும் சென்னை, புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

### சில்லிக்கொடியாறு, முனைத்தீவு கிராமங்களில்

# காட்டு யானைகள் தாக்கி இருவர் பலி

**ஏ.எச்.ஏ ஹூஸைன், வா. கிருஸ்ணா, வ. சக்தி**



போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முனைத்தீவு கிராமத்திலும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சில்லிக்கொடியாறு கிராமத்திலும் காட்டு யானைகள் தாக்கி இருவர் மரணமடைந்துள்ளார்கள்.

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முனைத்தீவு கிராமத்துக்குள் நேற்று (17) அதிகாலை 2.30 மணியளவில் புகுந்த காட்டுயானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது; 69 வயதுடைய காளிக்குட்டி சங்கரப்பிள்ளை என்பவர் தனது மனைவியுடன் வசித்துவந்துள்ளார். வீட்டில் கணவன் மனைவி இருவரும் உறங்கிக் கொண்டிருந்த நிலையில், வெளியில் ஏதோ சத்தம் கேட்கின்றது; வளவுக்குள் மாடுகள் உட்புகுந்து விட்டதாக நினைத்துக் கொண்டு, கையில் தடி ஒன்றையும் எடுத்துக் கொண்டு, வெளியில் வாசலுக்கு வந்துள்ளார். அவரது வாசலில் நின்ற காட்டுயானைகளில் ஒன்று, அந்த முதியவரைத் தாக்கி அடித்துள்ளது. இதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். காட்டுயானை, வீட்டின் பகுதிகளையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளது.

இரண்டு காட்டு யானைகள், திங்கட்கிழமை அதிகாலை முனைத்தீவுக் கிராமத்துக்குள் புகுந்து அங்கிருந்த வாழை, மா, மதில் என்பவற்றைச் சேதப்படுத்தும் காட்சி, அருகிலிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

போரதீவுப்பற்று காட்டுப்பகுதியை அண்டிய பகுதிகளில், மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திவந்த யானைகள், நேற்று மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்கு உள்ளும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில்லிக்கொடியாறு பகுதியில், பண்ணை பராமரிப்பாளராக கடமையாற்றி வந்த, காஞ்சிரங்குடா பகுதியை சேர்ந்த 65 வயதுடைய ஏழு பிள்ளைகளின் தந்தை பாலிப்போடி அரியநாயகம் என்பவர் சனிக்கிழமை (15) இரவு யானை தாக்கி பலியாகியுள்ளார்.

### மன்னார் மனித புதைகுழி:

# அகழ்வுக்கான திகதி அடுத்த தவணை அறிவிப்பு

**எஸ். றொசேரியன் லெம்பேட்**



மன்னார் 'சதொச' மனித புதைகுழி தொடர்பான வழக்கு, மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படும் போது அன்றைய தினம் 'சதொச' மனித புதைகுழி அகழ்வு பணிக்கான திகதி அறிவிக்கப்படும் என, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ் நிறைஞ்சன் தெரிவித்தார்.

மன்னார் 'சதொச' மனித புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று (17) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ் நிறைஞ்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட அறிக்கைக்கு அமைவாக, மன்னார் 'சதொச' மனித புதைகுழியை மீண்டும் அகழ்வு செய்வதற்கு, என்னென்ன விடயங்கள் தேவை, அழைக்கப்பட வேண்டிய திணைக்களங்கள், செலவு தொகை குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கைக்கு அமைவாக, மன்னார் பொலிஸாருக்கு, மன்னார் சதோச மனித புதைகுழியின் அகழ்வு பணி எப்போது ஆரம்பிப்பது என்பது தொடர்பாக, மன்னார் நீதிமன்றத்தில் அடுத்த தவணையில் தெரிவிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சார்பாக ஆஜரான சட்டத்தரணி புராதனி, காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தால், நிதி உதவியை மேற்கொள்ள முடியும் எனக் கூறினார்

இந்த நிலையில், அடுத்த தவணை நவம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று அகழ்வு பணி எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து தெளிவாக கூறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது என்றார்.

சீரற்ற வானிலையால்

# பதுளையில் பாதிப்பு

## குளத்தில் குளித்த வைத்தியர் மரணம்
## வீடுகள், விவசாய நிலங்கள் பாதிப்பு
## ஆலமரம் விழுந்ததால் அம்மன் ஆலயத்துக்கு சேதம்

எம்.செல்வராஜா





சீரற்ற காலநிலையால் பதுளை மாவட்டத்தில் பெய்துவரும் கடும்மழை மற்றும் கடுங்காற்று ஆகியவற்றால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றும் முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வைத்தியர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

மஹியங்களை பொது வைத்தியசாலையில் வைத்தியர்கள் இருவர், நேற்று முன்தினம் (16) மாலை மாப்பாகவெவ குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

இதனையடுத்து, மற்றைய வைத்தியரின் அபயக்குரல் கேட்டு அயலவர்கள் ஓடி வந்து, குளத்தில் இறங்கி தேடுதலை மேற்கொண்டனர்.

அவ்வேளையில் வைத்தியரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது. உடனடியாக 'சுவசரிய' அம்பியூலன்ஸ் மூலம் மஹியங்கனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும், அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

31 வயது நிரம்பிய திருமணமாகாத லக்சான் விஜயரத்தன என்பவரே குளத்தில் மூழ்கி மரணமாகியுள்ளார். அவரது சடலம் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதுடன், மரண விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை தெமோதரை, இறப்பர் டிவிசன் தோட்ட அம்மன் ஆலயத்தின் மீது, ஆலமரம் முறிந்து விழுந்ததால் ஆலயம் சேதத்துக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் விவசாய நிலங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியதுடன், பகுதியளவில் வீடுகளும்சேதமடைந்துள்ளன. அனர்த்தங்களால் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் உலருணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

மாவட்டத்தின் தாழ்நில பிரதேசங்களிலும் ஆறுகளுக்கு அருகாமையில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களில் வசிக்குமாறு, பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் மக்களை கேட்டுள்ளனர்.





## கவனயீர்ப்பு போராட்டம்

மலையக மக்களின் மாண்பினை காக்கும் அமைப்பின், பதுளை மாவட்டக் கிளையால், பசறை நகரில் நேற்று முன்தினம் (16) கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

(எம். செல்வராஜா)



நாவலப்பிட்டியில் கைதுசெய்யப்பட்டவர்கள்

# பிணையில் விடுதலை

எஸ்.கணேசன்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாவலப்பிட்டி நகரில் நேற்று முன்தினம் (16) ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சசங்க சம்பத் சஞ்ஜீவ உள்ளிட்ட 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அன்றிரவே, நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் சரீர பிணையில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டம், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் தலைமையில் நாவலப்பிட்டியில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு பிரிவினர், நாவலப்பிட்டி நகரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர்.

போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் கோரிய போதிலும், அதனை பொருட்படுத்தாது போராட்டம் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் இந்த 15 பேரும், கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கதிர்ச்செல்வனுக்கு பதிலீடு விஜயதுங்க

எம். கிருஸ்ணா

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தற்காலிக தவிசாளராக பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஜெயலத் விஜயதுங்க நியமிக்கப்பட்டுள்ளர்.

இதுவரை காலமும் தவிசாளராக பதவி வகித்த சு.கதிர்ச்செல்வனின் வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி அக்கரபத்தனை பிரதேச சபைக்கு புதிய தவிசாளர் நியமனம் இடம்பெறவுள்ள நிலையில், தற்காலிக தவிசாளராக ஜெயலத் செயற்படவுள்ளார்.

மருத்துவ பீட மாணவர் சங்கத்தின்

# வருடாந்த சமூக பராமரிப்பு நிகழ்ச்சி

ஷேன் செனவிரத்ன



பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் சங்கத்தால் வருடாந்தம் நடத்தும் மருத்துவ சமூக பராமரிப்பு நிகழ்ச்சி, இம்முறை கண்டி, தொலுவ மகா வித்தியாலய வளாகத்தில் நேற்று முன்தினம் (16) ஆரம்பமானது.

பிரதேசவாசிகள் அதிகளவில் கலந்துகொண்ட இந்த மருத்துவ நடவடிக்கையில், வெளிநோயாளர் சேவைகள், சுகாதாரம், சுகாதார கல்வித் திட்டங்கள், தொற்று நோய்களுக்கான சிறப்பு கிளினிக்குகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்பன முன்னெடுக்கப்பட்டன.

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதியான பேராசிரியர் டொக்டர் வசந்தி பின்டோவின் அறிவுறுத்தலுக்கு அமைய, விசேட வைத்தியர்கள் உட்பட 40 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள், 200 வைத்திய மாணவர்கள் ஆகியோர் இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக ஒன்றிணைந்தனர்.







## ஆசிரியர் தினம்

மடுல்சீமை, வெரலபத்தன தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா, பெற்றோரின் ஏற்பாட்டில், அதிபர் ஏ. ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

(ஆ. புவயரசன்)

# ஊதுபத்திகளுடன் பெண் முடிச்சுமாறிகள் சிக்கினர்

ரஞ்சித் ராஜபக்‌ஷ

தீபாவளி பண்டிகையொட்டி தமது கைவரிசைக் காட்ட வருகைத் தந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், பெண்கள் ஐவர் ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில், இவர்கள் ஐவரும், நேற்று (17) காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தீபாவளி கொண்டாட்டத்துக்கான பொருள் கொள்வனவுக்காக ஹட்டன் நகருக்கு வருகை தருபவர்களின் பணம், நகைகள் உள்ளிட்டவைகளை கொள்ளையடிப்பதற்காக சந்தேகநபர்கள் ஐவரும் ஹட்டன் நகருக்கு வருகை தந்துள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

18- 30 வயதுக்குட்பட்ட குறித்த ஐந்து பெண்களும் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர்கள் ஊதுப்பத்திகளை விற்பனை செய்யும் போர்வையில் ஹட்டன் நகருக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# 6 மாதத்தில் மூடியதை மீண்டும் திறக்கவும்

நீலமேகம் பிரசாந்த்



அக்கரப்பத்தனை பகுதியில் மூடப்பட்ட சமுர்த்தி காரியாலயத்தை மீளத்திறக்க வேண்டுமென அக்கரப்பத்தனை பிரதேச சபை உறுப்பினர் ராமன் கோபால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கரப்பத்தனை நகரத்தில் சமுர்த்தி பயனாளர்களின் நலன் கருதி, ஆறுமாதங்களுக்கு முன்னர் சமுர்த்தி காரியாலயம் திறக்கப்பட்டது.

அக்கரப்பத்தனை, டயகம, மன்றாசி, பசுமலை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள சமுர்த்தி பயனாளிகளின் நன்மைக் கருதி, இந்தக் காரியாலயம் அமைக்கப்பட்டது. ஆனால், திறக்கப்பட்ட ஆறுமாதத்துக்கு உள்ளேயே, மூடுவிழா கண்டுள்ளமை சமுர்த்தி பயனாளிகளிடத்தே பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏறத்தாழ 15,000க்கு அதிகமான சமுர்த்தி பயனாளிகளைக் கொண்டுள்ள இப்பகுதியில், தற்போது 18 கிலோ மீற்றர் தொலைவில் காணப்படும் லிந்துலை சமுர்த்தி காரியாலயத்திற்கே செல்லவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இக்காரியாலயத்திற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் மீள லிந்துலை காரியாலயத்திற்கே திருப்பியனுப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக லிந்துலை சமுர்த்தி காரியால தலைமை உத்தியோகத்தரிடமும் இ.தொ.கா பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானிடம் அறிவித்துள்ளதாகவும் மேலும் மாதாந்த சபை கூட்டத்தில், இது தொடர்பில் விவாதிக்கப்பட்டு உள்ளதாகவும் ராமன் கோபால் தெரிவித்தார்.

எனவே, விரைவாக மீளவும் அக்கரப்பத்தனையில் மூடப்பட்ட சமுர்த்தி காரியாலயம் திறக்கப்பட வேண்டுமென ராமன் கோபால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டிக்கோயா நகர நடைபாதைகள்

# நிரந்தர வாகன தரிப்பிடங்களாகின

சுதத்.எச்.எம்.ஹேவா

டிக்கோயா நகரின் நடைபாதைகளில் தொடர்ச்சியாக வாகனங்கள் நிறுத்தப்படுவதால், அந்தப் பகுதியைச் சேர்ந்த பாதசாரிகளுக்கு நடைபாதைகளை உரிய முறையில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

டிக்கோயா நகரிலுள்ள நடைபாதைகள் நிரந்தர வாகன நிறுத்துமிடங்களாக சாரதிகள் மாற்றிவிட்டனர் என பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

நடைபாதையில் அல்லாது வீதிகளில் இறங்கி பயணிப்பதால், விபத்துகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



# அவிழ்க்கமுடியாத முடிச்சைப்போட முயலும் கபடதன அறிவிப்பு

போட்டியொன்று நடத்தப்பட்டால் மட்டுமே வெற்றி, தோல்வி கிடைக்கும். நடத்தாமலே இறுக்கமான முடிச்சொன்றை போட்டுவிட்டால், இல்லையேல் காலத்தை நீட்டித்துவிட்டால், மௌமாக காலத்தை கடத்திக்கொண்டே சென்றுவிடலாம். அவ்வாறானதொரு முடிச்சையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போடுவதற்கு முயலுகின்றார்.

முடிச்சு போடுவதில் ரணிலுக்கு நிகர் ரணில்தான். நல்லாட்சிக்காலத்தில் மாகாண சபைகளுக்கு போட்ட முடிச்சை அவிழ்க்கமுடியாது, மாகாண சபைகளுக்கான தேர்தல் தள்ளிப்போய்க் கொண்டே இருக்கின்றது. இதற்கிடையில், உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய சட்டத்திருத்தத்தை கொண்டுவருவதற்கான அதிரடியான அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, தனது ஆட்சியில் மட்டுமன்றி, அவர் தலைமையிலான கட்சிக்குள்ளும் தேர்தலை நடத்தாது இழுத்தடித்துக்கொண்டே சென்றுவிடுவார். இதனிடையே உள்ளூராட்சி சபைகளின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை பாதியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாகும். இருக்கும் 341 உள்ளூராட்சி சபைகளுக்கு 2018ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில் 8,690 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தச் சபைகளுக்கு போதியளவில் வருமானமில்லை. உள்ளூர் வரி வருமானங்களும் குறைவு.

உறுப்பினர்களுக்கான செலவு உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான செலவுகளுக்காக மாகாண சபை, மத்திய அரசின் நிதியிலே தங்கியுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையிலும், எதிர்கால செலவுகளை கருத்தில் கொண்டும் ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்கது. எனினும், சட்டத்திருத்தம் எவ்வளவு விரைவாக செய்யப்படும் என்பதற்கெல்லாம் எதிர்காலமே பதில்கூறும்.

2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தின் காரணமாகவே, உள்ளூராட்சி சபைகளின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 2011ஆம் நடத்தப்பட்ட தேர்தலின் ஊடாக மொத்தமாக 4,486 உறுப்பினர்கள் மட்டுமே தெரிவாகினர்.

2018ஆம் ஆண்டு பெப்ரவரியில் தேர்தல் நடத்தப்பட்ட, உள்ளூராட்சி சபைகளுக்கான பதவிக் காலம் 2022 பெப்ரவரியுடன் நிறைவடைந்தன. எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, அப்பதவிக்காலத்தை 2023 மார்ச் 19 வரையிலும் நீடித்தார். அதனை இன்னும் நீடிக்கும் வகையிலான இழுத்தடிப்புகள் இடம்பெறுவதற்கும் வாய்ப்புகள் அதிகமாகும்.

உள்ளூட்சி மன்றங்களின் உறுப்பினர்களே, மக்களின் நேரடியான பிரதிநிதிகளாவர். அதன்பின்னர் மாகாண சபை உறுப்பினர்கள் செயற்படுவர். அவர்களின் யோசனைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள், உயரிய சபைக்குக் கொண்டுச்செல்வர்.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கைகள் கட்டப்பட்டுவிடுமாயின் மக்களின் சாதாரண பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும். இல்லையேல், எந்தவொரு பிரச்சினையையும் தீர்த்துக்கொள்வதற்கு மத்திய அரசிலேயே தங்கியிருக்கும் நிலை, சாதாரண பொதுமகனுக்கு ஏற்படும் என்பதை நினைவில் கொள்க!







# சுவரில்லாத சித்திரம்

**மொஹமட் பாதுஷா**

எழுபதுகளின் பிற்பகுதியில், கே. பாக்கியராஜ் இயக்கத்தில் 'சுவரில்லாத சித்திரங்கள்' என்றொரு திரைப்படம் வெளியானது. வறுமையின் தொடர் விளைவுகளைச் சித்திரிக்கின்ற ஒரு கதையாக அது அமைந்திருந்தது. முஸ்லிம் அரசியல்வாதிகளின், அரசியல் வறுமையைப் பார்க்கின்ற போது, இந்தத் தலைப்பு ஞாபகத்துக்கு வருவதுண்டு

'சுவர் இருந்தாலேயே சித்திரம் வரைய முடியும்' என்பது முதுமொழியாகும். மக்கள் சார்பு அரசியலைப் பொறுத்தமட்டில் 'சுவர்' என்பது, மக்கள் பலம், கொள்கை, மக்களுடனான தொடர்பு, சமூக சிந்தனை எனப் பல விடயங்களை உள்ளடக்கியது.

ஆனால், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் உள்ளடங்கலாக, கிட்டத்தட்ட அரசியல்வாதிகளும் இந்தச் 'சுவர்' இல்லாமலேயே சித்திரம் வரைந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது. நகைச்சுவை நடிகர் வடிவேலு பாணியில் சொன்னால், 'கட்டடம் உறுதியானது; ஆனால், அத்திவாரம்தான் பலவீனமாக இருக்கின்றது' என்பதுபோல்த்தான் இதுவும் இருக்கின்றது.

சித்திரம் வரைவதே நமது தொழில் என்றால், அதற்கான 'சுவரை' அல்லது பொருத்தமான தளப்பரப்பை எந்த நேரமும் தயாராக வைத்திருக்க வேண்டும். அரசியலைப் பொறுத்தமட்டில், காற்றிலோ கற்பனையிலோ சித்திரம் தீட்ட முடியாது.

அதேபோல், அந்தச் சுவரை, தேவைப்படும்போது மட்டும் துப்புரவு செய்து விட்டு, அழகழகான சித்திரம் வரைந்து, மக்களை மயக்கலாம் என்பதும் நீண்டகால அடிப்படையில் சாத்தியமற்றது.

இது அரசியலுக்கும் பொருந்தும்.

அதாவது, தேர்தல் காலத்தில் மாத்திரம் கொள்கைகளைப் பேசிக்கொண்டு, மக்களிடத்தில் வந்து, தம்மைப் பெரும் சமூகப் போராளிகளாக காட்டிக் கொண்டு, மக்களின் பிரச்சினைகளை மீண்டும் பேசுபொருளாக்குவது மக்கள் சார்பு அரசியலுக்கு, கொஞ்சம்கூட பொருத்தமற்றது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸும் சரி, மக்கள் காங்கிரஸும் சரி, தேசிய காங்கிரஸ் போன்ற பிற கட்சிகளும் சரி, முஸ்லிம் சமூகத்துக்குப் பொருத்தமானதொரு நிலைபேறான அரசியலை கட்டியெழுப்பவில்லை. பெருந்தேசியக் கட்சிகள் ஊடாக எம்.பியான முஸ்லிம் அரசியல்வாதிகளின் நிலையும் இதுதான்.

1990களுக்குப் பிறகு, ஏற்கெனவே ஓரளவுக்குப் பலமானதாக உருவாக்கப்பட்டிருந்த முஸ்லிம் சமூகத்துக்கான அரசியலை, 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர், இந்தக் கட்சிகள், தவணை முறையில் கெடுத்து குட்டிச் சுவராக்கியுள்ளன.

ஓர் அரசியல் கட்சி என்றால், தலைவர் என்றால், அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் என்றால், அவர்களிடம் ஒரு கொள்கை இருக்க வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய சரியான புரிதலும், அதற்காக இயங்க வேண்டும் என்ற சிந்தனையும் இருக்க வேண்டும்.

ஓர் 'அரசியல் ஜடம்' போல கிடக்காமல், எல்லாக் காலத்திலும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பதற்கான உந்துதல் இருக்க வேண்டும். தேர்தல் காலத்தில் மட்டுமன்றி, ஏனைய காலங்களிலும் மக்களுடனான உறவு மிதமான மட்டத்தில் பேணப்படுவது அவசியம்.

'சமூகத்துக்காக உயிரையும் தியாகம் செய்வோம்' என்று வாய்ச்சவாடல் விடுவதை விடுத்து, உயிரை விடப் பெறுமதி குறைந்த பதவிகள், பணம் உள்ளிட்டவற்றையேனும் தியாகம் செய்யச் சித்தமாய் இருத்தல் அவசியம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அப்படியான அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைக்கவில்லை. அல்லது, முஸ்லிம்கள், அவ்வாறான பண்புள்ளவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவில்லை; தலைவர்களாக முன்னிறுத்தவில்லை.

80, 90களில் இருந்த அரசியல் சூழல், இப்போது இலங்கையில் இல்லை. எனவே, மறைந்த எம்.எச்.எம் அஷ்ரப் போன்றவர்களுக்குக் கிடைத்த சில வாய்ப்புகள் நிகழ்காலத்தில் உள்ள அரசியல்வாதிகளுக்கு கிடைப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல!

ஆனால், வெளிப்படையாகவே கிடைத்த எத்தனையோ சந்தர்ப்பங்கள் தவற விடப்பட்டுள்ளன. இன்னும் பல வாய்ப்புகளை, அரசியல்வாதிகள் தமது கஜானாக்களை நிரப்புவதற்காகப் பாவித்துக் கொண்டார்கள் என்பதை அறியாத அளவுக்கு, மக்கள் முட்டாள்களல்லர்.

ஒரு பெருந்தேசிய கட்சிக்கு எதிராக, மக்களை அணிதிரட்டி வாக்குகளைப் பெற்றுவிட்டு, மக்களை அப்படியே நடுத்தெருவில் விட்டு விட்டு, மறுபக்கம் தாவி பதவிகளைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் ஏராளம் உள்ளன.

மக்கள் நலன் பற்றிச் சிந்திக்காமல் சட்டமூலங்கள், திருத்தங்கள், பிரேரணைகளுக்கு கையுயர்த்திய தடவைகளுக்கு கணக்கில்லை.

தமக்கு பிரச்சினை வரும் என்பதற்காக, 'நமக்கு ஏனிந்த வேண்டாத வேலை' என்ற தோரணையில், முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் பல முக்கியமான சந்தர்ப்பங்களில் 'கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாக' இருந்தார்கள். பல வேளைகளில் கூட்டத்தோடு கை உயர்த்தினார்கள்.

மறுபுறுத்தில், முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதாவது ஒரு பெருந்தேசிய கட்சிக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு இருக்கின்ற வேலையை மட்டும் தொடராகவும் கனகச்சிதமாகவும் செய்து வருகின்றனர். இதனால் முஸ்லிம் சமூகத்துக்கான அரசியல், தமது சொந்த அடையாளத்தை இழந்து கனகாலமாயிற்று.

கிட்டத்தட்ட எல்லா முஸ்லிம் பிரதிநிதிகளும், மக்களுக்கான அரசியலில் இருந்து துருவப்பட்டுப் போயுள்ளனர். இதனால் மக்கள் ஆதரவுத் தளம் என்பது, வெகுவாகக் குறைவடைந்துள்ளது. நீண்டகாலமாக அரசியலில் இருந்தவர்களுக்கும் புதுவரவு எம்.பிகளுக்கும் பத்தாயிரம் வாக்குகளைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமல் போவது, இதனால்தான் நேர்கின்றது.

இந்தப் போக்கை, முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. தேர்தல் காலத்தில், தமது சுவர்களை தூசுதட்ட அவர்கள் வரும்போது, மக்கள் இவற்றையெல்லாம் மறந்து விடுகின்றார்கள். இதனைப் பார்க்கும் போது, முஸ்லிம் சமூகம் பிழையான முறையில் அரசியல் மயப்படுத்தப்பட்டு உள்ளதோ என எண்ணத் தோன்றுவதுண்டு.

வடக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பிரச்சினைகள், கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகள், கொழும்பிலும் தெற்கிலும் உள்ளவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் மலையக முஸ்லிம்களின் பிரச்சினைகள் எல்லாம் பொதுவானவை கிடையாது.

சில பிரச்சினைகள் பொதுவானவை; சில விவகாரங்கள், அந்தந்த நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்களுக்கு பிரத்தியேகமானவையாக இருக்கின்றன. ஆயினும், இது பற்றிய முழுமையான பிரக்ஞையோ ஆவணப்படுத்தலோ, கணிசமான முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

சமூகத்தின் நீண்டகால, குறுங்காலப் பிரச்சினைகள் என்ன? அதனை எவ்வாறு முன்கொண்டு செல்ல வேண்டும்? அதற்கான சரியான அணுகுமுறை, வழித்தடம் என்ன என்ற ஒரு முறைப்படுத்தல் முஸ்லிம் அரசியலில் இல்லை.

முஸ்லிம் சமூகத்தின் தீர்மானிக்கப்பட்ட இலக்கு என்ன, எதனை நோக்கி எவ்வாறு நகர்ந்து செல்ல வேண்டும்? ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கான காலவரையறை என்ன? முதன்மைத் திட்டம் என்ன? மாற்றுத் திட்டம் என்ன என்பதையெல்லாம் தமிழ்க் கட்சிகளின் அளவுக்கு முஸ்லிம் கட்சிகளோ, அரசியல்வாதிகளோ நிர்ணயித்துச் செயற்படுவதாக ஆறுதல் கொள்ள முடியவில்லை.

'பிச்சைக்காரனின் புண்ணைப் போல', பிரச்சினைகள் இன்னும் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் வந்து, அந்தப் புண்ணைக்காட்டி, தமது பாத்திரங்களுக்குள் வாக்குப் பிச்சை கேட்கின்றனர்.

இதேவேளை, அரசாங்கத்தையும் பெருந்தேசிய கட்சிகளை மட்டுமன்றி, தமிழ்த் தேசிய தரப்புகளையும் மட்டுமன்றி, சர்வதேசத்தையும் மிகக் கவனமாகக் கையாள்வது எவ்வாறு என்பதை, 20- 30 வருட அனுபவமுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட, இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

முஸ்லிம் அரசியல்வாதிகளின் 'சும்மா' இருக்கும் இந்தப் போக்கை, இப்போதும் அவதானிக்க முடிகின்றது.

இப்போது அரசியலமைப்பை முழுமையாக மறுசீரமைக்க வேண்டும் என்பதற்கான கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் கைவிடப்பட்ட பின்னணியில், 22ஆவது திருத்தம் பற்றிப் பேசப்படுகின்றது.

தேர்தல் முறைமை மறுசீரமைப்புப் பற்றியும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது பற்றியும் பேசப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தலை, தமது வசதிக்காக அரசாங்கம் மறந்து விட்டதைப் போல தெரிகின்றது.

இதற்கிடையில், 13ஆவது திருத்தத்தை அமலாக்குதல், மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள், தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் பற்றி வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன.

'வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை அரசாங்கத்துக்காகவோ அல்லது முஸ்லிம்கள் விரும்பவில்லை என்பதற்காகவோ, தமிழ் தேசியம் கைவிடவில்லை.

ஆனால், மேற்சொன்னவை உள்ளடங்கலாக, மிக முக்கிய நடப்பு விவகாரங்கள் பற்றி முஸ்லிம் அரசியல் தலைவர்கள், எம்.பிக்கள் ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வந்ததும் இல்லை. அதற்காக கூட்டாக ஒரே குரலில் அழுத்தம் கொடுத்த வரலாறும் இல்லை.

இப்போது கூட, 'சும்மா இருத்தலே சுகம்' என்பது போலவே அவர்கள் வாழாவிருப்பதைக் காண முடிகின்றது. இந்த நிலை மிகக் கிட்டிய காலத்தில் மாறும் என்பதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

ஏனென்றால், முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கேள்வி கேட்குமளவுக்கு, முஸ்லிம் சமூகம் இன்னும் விழிப்படையவில்லை.



## வாழ்வியல் தரிசனம்

அதிகமாகக் கோபப்படுபவர்களைப் கவனித்தால், தேவையற்ற விடயங்களில், சஞ்சலப்படுபவர்களாகவே இருப்பார்கள். சிலருக்கு எதற்காகக் கோபப்படுகிறோம் என்பதே தெரியாது. தொடர்ந்து ஆத்திர உணர்வுடன் தங்களைப் பழக்கி வைத்தால், நேரம், காலம் தெரியாமல் எந்நேரமும் சினந்துகொண்டே இருப்பார்கள்.

நெஞ்சத்தை ஆறுதல்படுத்த தெரியாமல், உணர்ச்சிவசப்பட்டால் குணங்கள் மாறிவிடுகின்றன. தன்னால் மற்றவர்கள் அவஸ்தைப்படுவார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

கடுமையாக வேலை செய்தால், களைப்பினால் சினம் கொள்வதுண்டு. வீட்டில் அமைதி, நிம்மதி, கலகலப்பு, நகைப்பு எல்லாமே முக்கியமானது. இயற்கையை மனிதர்கள் மதிக்க வேண்டும். அன்பு நிரந்தரமாக அமையவேண்டும். சிரிக்கவும் புன்னகைக்கவும் பழகுதல் நல்லது. உணர்ச்சிகளை மிகையாக்கக் கூடாது. கோபம், கவலையைப் பிணைத்துவிடும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிபர்கள் கவலை:

## சான்றிதழ் வழங்குவதில் தாமதம்

அரச பாடசாலைகளில், பாடசாலை நிறுவனப் பொறுப்பை எடுத்து நடத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இலங்கை அதிபர் சேவை ஆகும்.

அதிபர் சேவை புதிய பிரமாணக் குறிப்புக்கு அமைய அதிபர் சேவை தரம் 3 க்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள், அதிபர் சேவை தரம் 2 இற்குப் பதவி உயர்வு பெறுவதாயின், அடிப்படை அதிபர் திறன் விருத்தி பயிற்சி பாடநெறியை (BPP) கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இந்நிலையில், 2016 இல் அதிபர் சேவை தரம் 3 இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிபர்களுக்கு, இப்பயிற்சி பாடநெறி பல மாகாணங்களில் நிறைவடைந்துள்ளது. இதற்கான சான்றிதழை, சில மாகாணங்கள் தமது கல்வி வலயங்களினூடாக உரிய அதிபர்களுக்கு, அவர்களின் பதவி உயர்வைக் கருத்தில் கொண்டு வழங்கிவிட்டன.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலும் அதிகமான தரம் 3 அதிபர்களுக்கு இரு கட்டங்களில் இப்பயிற்சி, பாடநெறி கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் சத்துருகொண்டான் சர்வோதய நிலையத்தில் வதிவிட செயலமர்வாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்கு, சான்றிதழ் வழங்குவதில் இழுத்தடிப்பு நிலை காணப்படுகின்றது.

சுமார் 4,000 மேற்பட்ட அதிபர்கள், இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் கடமை புரிகின்றனர். இச்சான்றிதழ் வழங்குவதிலுள்ள தாமதம் அவர்களின் பதவி உயர்வைத் தாமதிக்கலாம்.

இது குறித்து, அதிபர் சேவை பதவி உயர்வை எதிர்பார்த்திருக்கும் அதிபர்கள் கவலை அடைந்துள்ளனர்.

-ஏ.எச்.எச் ஹஸ்பர்

# பரபரப்பை ஏற்படுத்தியுள்ள காங்கிரஸ் தலைவர் தேர்தல்

இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தல் வாக்குப் பதிவு நேற்று (17) ஆரம்பமானது.

இத்தேர்தலில் காந்தி-நேரு குடும்பத்தைச் சேர்ந்த சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக சுமார் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் அக்குடும்பங்களைச் சேராத ஒருவர், இத்தேர்தல் மூலம் தலைவராகத் தெரிவு செய்யப்படவுள்ளார்.



அந்தவகையில் இத்தேர்தலில், கட்சியின் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜுன கார்கே, சசி தரூர் ஆகியோரிடையே நேரடி போட்டி நிலவுகின்றது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் சோனியா காந்தி, மற்றும் பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் புதுடெல்லியில் நேற்று (17) வாக்களித்துள்ளனர்.

# “ரூபாய் சரியவில்லை; டொலர் உயர்கிறது

## நிர்மலா சீதாராமன்



இந்திய பங்குச்சந்தையில் இருந்து அந்நிய முதலீடுகள் வெளியேற்றம், உக்ரேன் - ரஷ்யா போர், கச்சா எண்ணெய் விலை உயர்வு, அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தியமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு அண்மைக்காலமாக வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்து வருகின்றது.

அந்தவகையில் டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் பெறுமதி தற்போது 82.42 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்ற உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மாநாட்டில் பங்கேற்ற இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் செய்தியாளர் ஒருவர், இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து செல்வது குறித்து கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த நிர்மலா சீதாராமன், “இந்திய ரூபாயின் மதிப்பு சரிவதாக நான் பார்க்கவில்லை. அமெரிக்க டொலரின் மதிப்பு தான் தொடர்ந்து உயர்ந்து வருவதாகப் பார்க்கிறேன்.

வலுவடைந்து வரும் அமெரிக்க டொலருக்கு எதிராக அனைத்து நாடுகளின் பணமும் செயற்பட்டு வருகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, அமெரிக்க டொலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு வலுவாக உள்ளது. வளர்ந்து வரும் சந்தை நாடுகளின் பணத்துடன் ஒப்பிடும்போது இந்திய ரூபாய் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

குறிப்பாக, இந்திய பொருளாதாரத்தின் அடித்தளம் சிறப்பாக உள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பும் சிறப்பாக உள்ளது” என்றார்.



# பெண்கள் கல்லூரிக்குள் சுவர் ஏறிக் குதித்ததால் பரபரப்பு


புதுடெல்லியில் உள்ள பிரபல பெண்கள் கல்லூரியொன்றில் 14 ஆம் திகதி தீபாவளியை முன்னிட்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்க பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சம்பவத் தினத்தன்று கூட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து, குறித்த பெண்கள் கல்லூரியின் நுழைவு வாயில் மூடப்பட்டது. இதனையடுத்து ஆண் மாணவர்கள் சிலர், குறித்த கல்லூரியின் சுவரின் மீது ஏறி குதித்து உள்ளே நுழைந்துள்ளனர்.

அத்துடன் ஆபாச கோஷங்கள் எழுப்பி, முகம் சுழிக்கும் வகையிலும் நடந்து கொண்டுள்ளனர். இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஜார்க்கண்ட்

# ஆஞ்சநேயருக்கு உத்தரவிட்ட ரயில்வே திணைக்களம்



ஜார்க்கண்ட் மாநிலம், தன்பாத் என்ற நகரில் உள்ள ரயில் நிலையத்திற்குச் சொந்தமான இடமொன்று ஆக்கிரமிக்கப்பட்டு அதில் ஆஞ்சநேயர் கோவிலொன்று கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கோவிலை அகற்றுமாறு கோரி ஆஞ்சநேயருக்கு ரயில்வே திணைக்களத்தினால் நோட்டீஸ் அனுப்பட்டுள்ளது.

ஹனுமானுடைய பெயருக்கு நேரடியாக முகவரியிடப்பட்ட அந்த அறிவிப்பில், ‘ரயில்வேக்கு சொந்தமான நிலத்தை நீங்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளீர்கள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இது சட்டப்படி குற்றம் எனவும், பத்து நாள்களுக்குள் அக்கோவிலை அகற்றுமாறும், அவ்வாறு செய்யாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதை முக்கிய அறிவிப்பாக கருதுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள், இதற்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றனர்.




திருப்பூர்

# அமேசான் சுவரை துளையிட்டு கொள்ளை

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் அமேசான் நிறுவனத்தின் களஞ்சியசாலையொன்று உள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (16) இரவு குறித்த களஞ்சியசாலையின் சுவரை மர்ம நபர்கள் சிலர் துளையிட்டு, அங்கிருந்த பல இலட்சம் பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து நேற்று (17) காலை குறித்த களஞ்சியசாலைக்குச் சென்ற ஊழியர்கள், களஞ்சியசாலையில் கொள்ளை நடந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மத்திய பிரதேசம்

# இந்தியில் மருத்துவம் படிப்பதால் பாதிப்பு



இந்தியாவில் முதல் முறையாக, மத்திய பிரதேசத்தில், இந்தி மொழி மூலமான எம்.பி.பி.எஸ் மருத்துவக் கல்வியை உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று முன்தினம் (16) தொடங்கி வைத்தார்.

அந்தவகையில் 13 அரச மருதுவக்கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு உடற்கூறியல், உடலியல், உயிர்வேதியியல் ஆகிய மூன்று பாடங்கள் இந்தியில் கற்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், “ஹிந்தியில் மருத்துவக் கல்வி, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடும்” என இந்திய மருத்துவ சங்கத்தின் முதன்மை ஆய்வாளரும், நிபுணருமான டொக்டர் நரேஷ் புரோகித் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்தியா பன்முகத்தன்மை கொண்ட நாடு. பலதரப்பட்ட பின்னணியைக் கொண்ட மாணவர்கள், அரச மருத்துவ கல்லூரிக்கு வருகை தருகின்றனர். குறிப்பாக தமிழ்நாடு, கேரளா என தென் மாநில மாணவர்கள் இந்தியில் சரளமான பேச்சுத்திறன் கொண்டிருக்க மாட்டார்கள். இவர்களுக்கு இந்த முடிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் எம்.பி.பி.எஸ். என்பது அடிப்படை பட்ட படிப்பு அல்ல” என்றார்.



காஷ்மீர்

# வைரலாகும் மண்வீடு

சமீர் அஹமது என்ற இளைஞர் கட்டியுள்ள ‘குலுபே கொட்டேஜ்’ என்ற மண்வீடுகள், ஜம்மு மற்றும் காஷ்மீரில் ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மாறியுள்ளன.

மண்ணினால் செய்யப்பட்ட இக்குடியிருப்புத் தொடர், நவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து சமீர் கருத்துத் தெரிவிக்கையில், “நான் இதுவரை மூன்று மண் வீடுகளைக் கட்டியுள்ளேன். இவ் வீடுகளின் சுற்றுப்புறம் பழைமையான வாழ்க்கை உணர்வைத் தருகின்றன. அதே நேரத்தில், உட்புறத்தில் உள்ள நவீன வசதிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு எவ்வித சிரமத்தையும் ஏற்படுத்தாதவாறு உள்ளன. இவ் வீடுகள் பழைய வாழ்க்கை முறையை மீட்டெடுப்பதற்கான ஒரு வழியாகக் காணப்படுகின்றன” என்றார்.

# தெலுங்கில் பிரியா



அகிலன், ருத்ரன், பொம்மை, பத்துதல, இந்தியன் உள்ளிட்ட படங்களில் நடித்து வரும் நடிகை பிரியா பவானி சங்கர் தற்போது தெலுங்கு படம் ஒன்றில் ஒப்பந்தமாகியுள்ளார்.

தமிழ் படங்களில் பிசியாக நடித்து வந்த நடிகை பிரியா பவானி சங்கர், தற்போது தெலுங்கு படம் ஒன்றில் ஒப்பந்தமாகியுள்ளார்.

சின்னத்திரையில் சீரியல்களில் நடித்து வந்த நடிகை பிரியா பவானி சங்கர் தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வருகிறார். இயக்குனர் ரத்னகுமார் இயக்கத்தில் வெளியான மேயாதமான் படத்தில் நாயகியாக நடித்து தமிழ் சினிமாவில் அறிமுகமான பிரியா, தற்போது பல திரைப்படங்களில் பிசியாக நடித்து வருகிறார்.

மேயாதமான் படத்திற்கு கிடைத்த வரவேற்பை அடுத்து கடைக்குட்டி சிங்கம், மான்ஸ்டர், மாபியா, களத்தில் சந்திப்போம், கசடதபற, ஓமணப் பெண்ணே, ஹாஸ்டல், யானை, திருச்சிற்றம்பலம் ஆகிய படங்களிலும் தனது நடிப்பை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார் பிரியா பவானி சங்கர்.

நயன்தாரா விவகாரம்:

# அறிக்கைக்கு பின் நடவடிக்கை



நடிகை நயன்தாரா- இயக்குநர் விக்னேஷ் சிவன் கடந்த ஜூன் 9ஆம் திகதி சென்னையில் திருமணம் செய்துகொண்டனர். திருமணமாகி நான்கு மாதங்களேயான நிலையில் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துள்ளதாக அறிவித்தனர்.

வாடகைத் தாய் மூலம் அவர்கள் குழந்தை பெற்றுக் கொண்டது தெரிய வந்தது. வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றெடுக்க பல்வேறு விதிமுறைகள் இருக்கும் நிலையில், இந்த விதிமுறைகள் மீறப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்தது.


இந்நிலையில், காதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறுகையில், “நயன்தாரா விவகாரத்தில் 4 பேர் கொண்ட குழுவை நியமித்திருக்கிறோம். அந்த குழு விசாரிக்கிறது. முழு அறிக்கை கிடைக்கபெற்ற பின்னர் எந்த மாதிரியான விதிமீறல் நடைபெற்றிருக்கிறது. விதிமீறலின் தன்மை சட்டத்திற்கு உட்பட்டதா? இல்லையா? என்று முழுவிவரமும் அறிவிக்கப்படும்" என்றார்.

பட்ஜெட்டை நெருங்காத

# இந்தி ‘விக்ரம் வேதா’

பாலிவுட் ‘விக்ரம் வேதா’ திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி இரண்டு வாரங்கள் கடந்த நிலையிலும் படத்தின் வசூல், பட்ஜெட்டை எட்டவில்லை என கூறப்படுகிறது.

2017-ம் ஆண்டு புஷ்கர் காயத்ரி இயக்கத்தில் மாதவன், விஜய் சேதுபதி நடிப்பில் தமிழில் வெளியான திரைப்படம் ‘விக்ரம் வேதா’. படம் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இதையடுத்து, இப்படத்தை ‘விக்ரம் வேதா’ பெயருடன் இந்தியில் இயக்கியது படக்குழு. இதில், மாதவன் கதாபாத்திரத்தில் சயீஃப் அலிகானும், விஜய் சேதுபதி கதாபாத்திரத்தில் ஹ்ரித்திக் ரோஷனும் நடித்துள்ளனர். இதனால், பாலிவுட்டில் படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.



இப்படம் செப்டம்பர் 30-ல் திரையரங்குகளில் வெளியானது. வட மாநிலங்களில் படத்திற்கான வரவேற்பு எதிர்பார்த்த அளவில் இல்லை என்றும் கூறப்படுகிறது. படம் முதல் நாளில் ரூ.10.58 கோடியையும், இரண்டாவது நாளில் 12.51 கோடியையும், மூன்றாவது நாளில் ரூ.13.85 கோடியையும் வசூலித்து மூன்று நாட்கள் முடிவில் மொத்தமாக ரூ.36.94 கோடியை வசூலித்துள்ளதாக படத்தின் தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.

# வெளியான ‘சலார்’ பட போஸ்டர்



நடிகர் பிருத்விராஜின் பிறந்த நாளான நேற்று (17), ‘சலார்’ படத்தில் அவர் நடிக்கும் வரதராஜ மன்னர் எனும் கதாபாத்திரத்தின் தோற்றப் புகைப்படத்தை வெளியிட்டு, படக்குழுவினர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

‘கேஜிஎஃப்2’ படத்திற்கு பிறகு பிரபாஸை வைத்து பிரசாந்த் நீல் இயக்கும் படம் ‘சலார். ஹோம்பாலே பிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் தயாரிப்பாளர் விஜய் கிரகந்தூர் பிரம்மாண்டமான பொருட்செலவில் தயாரித்து வரும் இந்தப் படத்தில் நட்சத்திர நடிகர் பிருத்விராஜ் சுகுமாரன், அழுத்தமான வேடத்தில் நடித்திருக்கிறார். அதன் கேரக்டர் லுக் போஸ்டர், அவருடைய பிறந்தநாளான நேற்று படக்குழுவினரால் வெளியிடப்பட்டிருக்கிறது.

‘சலார்’ படத்தைப் பற்றிய புதிய தகவலை ரசிகர்களிடம் பகிர்ந்து கொள்வதற்காக படக் குழுவினர், நடிகர் பிருத்விராஜின் பிறந்தநாளை வாய்ப்பாகக் கருதி, அவர் நடித்திருக்கும் வரதராஜ மன்னர் எனும் கதாபாத்திரத் தோற்றப் புகைப்படத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ‘சலார்’ படத்தில் இடம்பெறும் வரதராஜ மன்னர் எனும் கதாபாத்திரம், கதையின் நாயகனான பிரபாஸிற்கு இணையான கதாபாத்திரமாக படத்தில் இடம்பெற்றிருக்கிறது.

# ‘ஜெயிலர்’ படப்பிடிப்பு உற்சாக வரவேற்பு




கடலூரில் நடைபெற்று வரும் ‘ஜெயிலர்’ படப்பிடிப்பிற்கு புதுச்சேரியில் இருந்து சென்ற நடிகர் ரஜினிக்கு புதுச்சேரி எல்லை பகுதிகளில் ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்த் ‘அண்ணாத்த’ படத்திற்கு பிறகு இயக்குநர் நெல்சன் இயக்கத்தில் தற்போது ‘ஜெயிலர்’ படத்தில் நடித்து வருகின்றார்.

இதில் ‘படையப்பா’ படத்திற்கு பிறகு ரம்யாகிருஷ்ணன் இணைந்து நடித்து வருகிறார். இயக்குநர் நெல்சன் இயக்கி வரும் இப்படத்தின் முதற்கட்ட காட்சிகள் முடிவடைந்த நிலையில் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு கடலூர்-புதுச்சேரி அருகே அழகியநத்தம் தென்பெண்ணையாற்று பாலம் அருகே ஒக்டோபர் 16ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

# ஹன்சிகாவுக்கு டும்-டும்-டும்



தனுஷின் ‘மாப்பிள்ளை’ படம் மூலம் தமிழில்அறிமுகமானவர் ஹன்சிகா. தொடர்ந்து, விஜய், சூர்யா, கார்த்தி, ஜெயம் ரவி, சிம்பு உள்ளிட்ட முன்னணி ஹீரோக்களுக்கு ஜோடியாக நடித்தார். இவர், தென்னிந்திய அரசியல் பிரமுகர் ஒருவரின் மகனை திருமணம் செய்து கொள்ள இருப்பதாக சில மாதங்களுக்கு முன் செய்தி பரவியது. அப்போது அதை அவர் மறுத்தார்.

இந்நிலையில், அவர் திருமணம் டிசெம்பர் மாதம் நடக்க இருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

# மேலே ஆகாயம் கீழே பாதாளம்



பாரதிராஜா இயக்கத்தில் வெளியான அலைகள் ஓய்வதில்லை படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு கதாநாயகனாக அறிமுகமானவர் கார்த்திக். அதன்பின்னர் பல படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வந்தார். இவர் தற்போது மனிதன் சினி ஆர்ட்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் படம் ‘தீ இவன்’ படத்தில் நடித்து வருகிறார்.

இப்படம் பற்றி இயக்குநர் டி.எம்.ஜெயமுருகன் கூறியதாவது:

“இந்தப் படத்தில் இடம் பெறவுள்ள ‘மேலே ஆகாயம் கீழே பாதாளம் நடுவில் ஆனந்தம்’ என்ற பாடலுக்கு நடிகை சன்னி லியோனை நடனமாட வைக்க வேண்டும் என்று வெகு நாள்கள் காத்திருந்தோம். அந்த ஆசை தற்போது நிஜமாகியுள்ளது.

மும்பை சென்று நடிகை சன்னி லியோனை நேரில் சந்தித்து படம் பற்றி கூறினேன். கதை மற்றும் நடிகர்களை கேட்டவுடன் அந்தப் பாடலுக்கு நடமாட ஒப்புக்கொண்டார். அதோடு பாடல் வரிகள் சிறப்பாக உள்ளது” எனத் தெரிவித்தார்.

# கால்பந்து லீக்குகள் கைகோர்ப்பது அதிகரிப்பு

முன்கூட்டியே தேர்தலை நடத்தி, கால்பந்து நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக, எங்களுடன் உள்ள அனைத்து லீக்குகளும் என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தன எனத் தெரிவித்த, இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர், மேலும் 4 கால்பந்து லீக்குகள் எனக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன என்றார்.

2022 செப்டெம்பர் 22 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில், 61 லீக்குகளில் 13 லீக்குகள் வாக்களிக்கவில்லை. 48 லீக்குகள் ஆதரவாக வாக்களித்தன.

புதிய யாப்புக்கு ஆதரவாக, வாக்களிக்காத 13 லீக்குகளில், மேலும் 4 லீக்குகள் இலங்கை கால்பந்தில் தற்போது நிலவும் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வரத் தம்முடன்




கலந்துரையாடியதாகவும், 61 லீக்குகளில் 52 லீக்குகள் விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளதாகவும் ஜஸ்வர் உமர் கூறினார்.

குறிப்பாக, தற்போதுள்ள கால்பந்து நிர்வாகம், எதிரான தரப்புடனும் லீக்குகளுடனும் பேச்சுவார்த்தை மூலம் கால்பந்தாட்டத்துறையின் மேம்பாட்டுக்காக, உடன்பாட்டை ஏற்படுத்த ஒப்பந்தங்களை எட்டுகிறது. ஆனால் மற்ற எதிர் கட்சிகள் எதிரான தரப்பும் சில லீக்குகளும் தமது தனிப்பட்ட நலனுக்காக செயற்படுகின்றன என்றார்.

இதனால் உதைபந்தாட்ட தேர்தல் மேலும் காலதாமதமாகும். இதனால் கால்பந்தாட்ட நிர்வாக விவகாரங்களில் மேலும் சிக்கல் ஏற்படும் எனவும் ஜஸ்வர் உமர் தெரிவித்துள்ளார்.

மேலும் கால்பந்தாட்ட தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால் இலங்கையில் கால்பந்தாட்டம் நாளுக்கு நாள் நெருக்கடியை நோக்கி செல்வதாக இந்த லீக்குகள் சுட்டிக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கால்பந்தாட்ட நெருக்கடியை விரைவில் முடிவுக்கு கொண்டுவந்து விரைவாக தேர்தலுக்கு செல்வதே இந்த லீக்குகளின் நோக்கமாக உள்ளது என்றார்.

உலகக் கிண்ணம்:

# ஸ்கொட்லாந்திடம் தோற்றது மேற்கிந்தியத் தீவுகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஹோபார்ட்டில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் ஸ்கொட்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

ஸ்கொட்லாந்து: 160/5 (20 ஓவ. )




(துடுப்பாட்டம்: ஜோர்ஜ் முன்சீ 66 (53) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 2/14 [3], அல்ஸாரி ஜோசப் 2/28 [4], ஒடியன் ஸ்மித் 1/31 [4], அகீல் ஹொஸைன் 0/31 [4])

மே. தீவுகள்: 118/10 (18.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் ஹோல்டர் 38 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வாட் 3/12 [4], மிஷெல் லீஸ்க் 2/15 [4], பிரட் வேல் 2/32 [4], ஸஃப்யான் ஷரிஃப் 1/23 [3.3])

போட்டியின் நாயகன்: ஜோர்ஜ் முன்சீ

# டிசெம்பர் 16இல் ஐபிஎல் ஏலம்

2023-ம் ஆண்டு ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் பங்கேற்பதற்கான ஏலத்தை டிசெம்பர் 16 ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொரோனா காரணமாக 2020, 2021-ம் ஆண்டுகளில் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஐபிஎல் போட்டி நடத்தப்பட்டது. 2022-ம்ஆண்டில் ஐபிஎல் போட்டிகள் மகாராஷ்டிர மாநிலம் மும்பை, புனே நகரங்களில் நடத்தப்பட்டன.

இந்நிலையில், 2023-ம்ஆண்டில் உள்ளூர் மைதானங்களில் ஐபிஎல் போட்டிகள் நடத்தப்படும் என பிசிசிஐ அறிவித்துள்ளது. இதையடுத்து வரும் டிசெம்பர் 16ஆம் திகதி ஐபிஎல் வீரர்கள் ஏலத்தை நடத்த பிசிசிஐ முடிவு செய்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



# மூன்றாவது இடத்தை பிடித்தார் கோலி

2021-ம் ஆண்டு இன்ஸ்டாகிராம் மூலம் அதிக வருமானம் ஈட்டிய பிரபலங்களின் பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் விராட் கோலி. மூன்றாவது இடம் பிடித்துள்ளார்

முதல் இரண்டு இடங்களில் கால்பந்தாட்ட வீரர்கள் ரொனால்டோ மற்றும் மெஸ்ஸி ஆகியோர் உள்ளனர். நெட் கிரெடிட் நிறுவனம் நடத்திய ஆய்வின் அடிப்படையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டோ மற்றும் வீடியோக்களை ஷேர் செய்ய பயன்பட்டு வருகிறது சமூக வலைதளமான இன்ஸ்டாகிராம். இது மெட்டா நிறுவனத்தின்



வசம் உள்ளது. இதில் பிரபலங்கள் தொடங்கி சாமானியர்கள் வரையில் பலரும் பயனர்களாக உள்ளனர். இவர்களில் அதிகம் பின்தொடர்பவர்களை பெற்றவராக போர்ச்சுகல் அணியின் வீரர் ரொனால்டோ உள்ளார்.

மூன்றாவது இடத்தில் அர்ஜென்டினாவின் மெஸ்ஸி உள்ளார். அதிக பின்தொடர்பவர்களை பெற்ற டொப் 20 பயனர்களில் ஒருவராக விராட் கோலியும் உள்ளார்.

அந்த வகையில் இந்த ஸ்பான்சர்ஷிப் பதிவுகள் மூலம் கடந்த 2021-இல் மட்டும் ரொனால்டோ சுமார் 85.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளார். மெஸ்ஸி, 71.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளார். மூன்றாவது இடத்தில் உள்ள கோலி, 36.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளார்.

# ரியல் மாட்ரிட்டிடம் விழுந்த பார்சிலோனா

நடப்பு லா லீகா தொடரில் பார்சிலோனா அணியை 3 - 1 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட் அணி வீழ்த்தி உள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான போட்டி எல் கிளாசிகோ என அழைக்கப்படுகிறது.

இந்த போட்டி ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட் பகுதியில் உள்ள சான்டியாகோ பெர்னாபு மைதானத்தில் நடைபெற்றது.

ஸ்பெயின் நாட்டில் கால்பந்தாட்ட கிளப் அணிகளுக்கு இடையே நடைபெறும் தொடர் தான் லா லீகா. கடந்த 1929 முதல் நடத்தப்பட்டு வரும் தொடராகும் தற்போது, 2022-23 சீசனுக்கான தொடர் 92-வது சீசனாகும். மொத்தம் 85 போட்டிகள். இதுவரையில் நடைபெற்றுள்ள லீக் போட்டிகளில் நடப்பு சாம்பியனான ரியல் மாட்ரிட் மற்றும் பார்சிலோனா அணிகள் புள்ளி பட்டியலில் முதல்



இரண்டு இடங்களில் உள்ளன.

இந்நிலையில், இந்த இரண்டு அணிகளும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் நேருக்கு நேர் பலப்பரீட்சை செய்தன. இந்த இரு அணிகளும் மோதும் போட்டிகளை 'எல் கிளாசிகோ' என அறியப்படுகிறது. கால்பந்தாட்ட உலகில் கிளப் அணிகளுக்கு இடையில் நடைபெறும் போட்டிகளில் இது மிகவும் பிரபலமான போட்டியாகும்.

இதில் இரண்டு அணிகளும் விளையாடின. மைதானம் முழுவதும் ரசிகர்கள் நிறைந்திருந்தனர். அதோடு உலகம் முழுவதும் சில நாடுகளில் இந்த போட்டி சிறப்பு காட்சியாக நேரலையில் ஒளிபரப்பட்டது.

உக்ரேன் பெண்களை பலாத்காரம் செய்வதற்கு

# வயாகரா கொடுக்கும் ரஷ்யா

உக்ரேன் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்ய, ரஷ்ய இராணுவ வீரர்களுக்கு 'வயாகரா' மாத்திரை கொடுக்கப்படுவதாக ஐ.நா சிறப்பு பிரதிநிதி குற்றஞ்சாட்டி உள்ளார்.

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 8 மாதங்களுக்கு மேலாகப் போர் தொடுத்து வருகின்றது. அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில், இப்போர் தொடர்பாக ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி பிரமிளா பட்டன், அதிர்ச்சியூட்டும் தகவல்களை




வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது; "படையெடுப்பு தொடங்கியதில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறை வழக்குகளை ஐ.நா பதிவு செய்துள்ளது.

இப் போரில் பெண்கள், சிறுமிகள் மட்டுமல்லாது ஆண்களும் சிறுவர்களும் கூட பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் ரஷ்ய வீரர்கள் வயாகராவை பயன்படுத்துவதாக பாதிக்கபட்ட பெண்கள் சாட்சியமளித்துள்ளனர். இதுவும் ஓர் இராணுவ உத்தியாகவுள்ளது. மேலும், சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின்படி, பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் வயது 4 முதல் 82 வயது வரை இருக்கும்" என்றார்.

இந்நிலையில் இக் குற்றச் சாட்டுக்களை மறுத்துள்ள ரஷ்யா, பொதுமக்கள் வெளியேறிய பகுதிகளில் மட்டுமே தாம்கவனம் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

# 'டேட்டிங்' குறித்து சிறுமிக்கு பைடன் அறிவுரை

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சிறுமி ஒருவருக்கு 'டேட்டிங்' குறித்து அறிவுரை வழங்கும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றது.

குறித்த வீடியோவில், "30 வயதாகும் வரையில் ஆண்கள் யாரும் உன்னிடம் சீரியசாக



நடக்க மாட்டார்கள்" என ஜோ பைடன் தெரிவித்தார்.

இதைக்கேட்ட சிறுமி, இக் கருத்தை தாம் மனதில் வைத்து கொள்வதாகக் கூறி சிரித்தார்.

இந்நிலையில் இதனைப் பார்த்த பலரும், பைடனின் கருத்தால் அச்சிறுமி அசௌகரியமாக உணர்ந்துள்ளார் எனப் பதிவிட்டுள்ளனர்.

சீனா

# மீண்டும் சீன ஜனாதிபதியாக ஜின்பிங்?

உலக அளவில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட, சீனாவின் ஆளும் கட்சியான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு சனிக்கிழமை (15) ஆரம்பமானது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இம் மாநாட்டில், சீன ஜனாதிபதியாக 69 வயதான சீ ஜின்பிங் மூன்றாவது முறையாகவும் தெரிவு செய்யப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



அவ்வாறு ஜனாதிபதியாக ஜின் பிங் தெரிவு செய்யப்படுமிடத்து, தனது ஆயுள் முழுவதும் சீனாவின் ஜனாதிபதியாக அவர் நீடிக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றிய ஜின்பிங், ஹொங்கொங், தாய்வான் விவகாரம், கொரோனா தொற்றை ஒழிக்கும் கொள்கை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து காரசாரமாகப் பேசினார்.

இதன்போது, உலகத் தரம் வாய்ந்த இராணுவத்தைக் கட்டமைப்பதில் சீனா எப்போதும் அதிக கவனம் செலுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்தான்புல்

# 24 மாடிக் கட்டடத்தில் தீ விபத்து

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள ஃபிகிர்டெப் பகுதியில், பிரபல 24-மாடிக் கட்டடத்தில் நேற்று முன்தினம் (16) பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு வீரர்கள் மிகுந்த போராட்டத்திற்கு மத்தியில் தீயை அணைத்துள்ளனர்.

இத் தீ விபதையடுத்து குறித்த பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இத் தீவிபத்துக்கான காரணம் மற்றும் சேத விவரம் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.



அமெரிக்கா

# 140 ஆண்டுகளாகியும் கிழியாத ஜீன்ஸ்

லெவி ஸ்ட்ராஸ் என்பவரால் 1853ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது 'லெவிஸ் ஜீன்ஸ்' நிறுவனம்.

இந்நிறுவனம் தற்போது உலகின் முன்னணி ஜீன்ஸ் நிறுவனமாகத் திகழ்கின்றது.

இந்நிலையில், அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள சுரங்கம் ஒன்றில் 1880 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட லெவிஸ்



ஜீன்ஸ் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 140 ஆண்டுகள் கழிந்த பின்னரும், குறித்த ஜீன்ஸ் நல்ல நிலையில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த ஜீன்ஸை 87 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு(இலங்கை மதிப்பில் 318 இலட்சம் ரூபாய்) பழைய ஆடைகளை சேகரிக்கும் ஆர்வலர்களான கைல் ஹாபெர்ட்டும் சிப் ஸ்டீவன்சனும் ஏலத்தில் வாங்கியுள்ளனர்.

ஈரான்

# சிறைச்சாலையில் தீ; நால்வர் உயிரிழப்பு


ஈரானின் தலைநகர் டெஹ்ரானின், புறநகர் பகுதியான எவின் என்கிற இடத்தில் மிகப்பெரிய சிறைச்சாலை உள்ளது.

இச்சிறையில் பெரும்பாலும் அரசியல் கைதிகள், வெளிநாட்டு கைதிகள், ஹிஜாப் எதிர்ப்பு போராட்டக்காரர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (16) இரவு கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், அங்கு காணப்படும் துணிக்கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற தீயணைப்புப் படை வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். இவ் விபத்தில் 4 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

மேலும் 60க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 18 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.